இரு தரப்பினரும் ஒப்புதல் அட்டவணை உள்ளடக்கத்தின் (Table of Content) அடிப்படையில் கூட்டு சாத்திய ஆய்வினை துவங்கினர். 2019 பிப்ரவரியில் கூட்டு சாத்திய ஆய்வானது பூர்த்தி செய்யப்படுவதுடன் அதன் அறிக்கை மார்ச் மாத தொடக்கத்தில் சமர்ப்பிக்கப்படும்.

### 2.2.2. சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளின் கீழ் சர்வதேச வர்த்தகம்

2018 இல் இலங்கை வர்த்தக உடன்படிக்கைகளின் கீழ் வர்த்தக விபரங்கள் அட்டவணை 2.6 இல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.6**
**2018 இல் இலங்கை வர்த்தக உடன்படிக்கைகளின் கீழ் இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள்**

| இல. | வர்த்தக உடன்படிக்கை | இறக்குமதிகளின் சீ.ஐ.எப்.பெறுமதி (ரூ.மில்.) | ஏற்றுமதிகளின் எப்.ஓ.பி. பெறுமதி (ரூ.மில்.) |
|---|---|---|---|
| 1 | இந்திய - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (ISFTA) | 41,273 | 81,929 |
| 2 | பாகிஸ்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (PSFTA) | 12,062 | 8,772 |
| 3 | தென் ஆசிய சுதந்திர வர்த்தக (SAFTA) உடன்படிக்கை | 1,215 | 9,237 |
| 4 | சார்க் (SAARC) முன்னுரிமை வர்த்தக ஒழுங்கமைப்பு உடன்படிக்கை (SAPTA) | 3,076 | 108,018 |
| **மொத்தம்** | | **57,626** | **207,956** |

*மூலம்: இலங்கை சுங்கத் திணைக்களம், 2018*

## 2.3 வர்த்தக வசதி

வர்த்தக வசதி பொதுவாக வர்த்தக நடைமுறைகள் மற்றும் ஆவணங்கள் என்பனவற்றினை இலகுபடுத்தல், வர்த்தக செயற்பாடுகள் மற்றும் சட்டங்கள் என்பனவற்றை இணங்கச்செய்தல், சர்வதேச உட்பாய்ச்சல் தொடர்பிலான வெளிப்படைத் தன்மைமிக்க தகவல்கள் மற்றும் நடைமுறைகள், சர்வதேச வர்த்தகத்தினை மேம்படுத்துவதற்கான புதிய தொழில்நுட்பங்களுக்கான வளங்கள் மற்றும் சர்வதேச வர்த்தகத்திற்கான மிகவும் பாதுகாப்பான கொடுப்பனவு முறைகள் போன்ற முக்கியமான ஐந்து அமசங்களை உள்ளடக்கியுள்ளது. வர்த்க கொடுகல் வாங்கல்களை எளிதாகவும், விரைவாகவும், அதிகம் வினைத்திறனுடனும் மற்றும் குறைந்த செலவிலும் மேற்கொள்வதற்கான வசதிகளை வழங்குவதல் என்பனவற்றினை வர்த்தக வசதி இலக்காகக் கொண்டுள்ளதோடு இதன் மூலம் வர்த்தகப் பாய்ச்சல்களும் எளிதாக்கப்படுகிறது பொருட்கள் மற்றும் சேவைகள் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செயற்பாட்டினை எளிதாக்குவதன் மூலம் வெளிநாட்டு நேரடி முதலீட்டிற்கான வளர்ந்துவரும் நாடுகளின் கவர்ச்சித்தன்மையினையும் வர்த்தக வசதி நடவடிக்கைகள் அதிகரிக்கின்றன. உலகளாவிய பெறுமதிச் சங்கிலி ஒன்றில் பெருவாரியாக பிணைக்கப்பட்டுள்ள சர்வதேச பொருளாதார முறைமையொன்றினுல் கரை கடந்த வர்த்தகத்திற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது இன்றியமையாததொரு செயற்பாடாகும்.

உலக வர்த்தக அமைப்பின் வர்த்தக வசதியளிப்பு உடன்படிக்கையின் குறிக்கோள்களான சுங்க நடைமுறைகளை ஒழுங்குபடுத்துதல், இணக்கப்படுத்துதல் மற்றும் நவீனமயமாக்குதல் என்பன விரைவில் அமுல்படுத்தப்படவுள்ளன. இது பொருட்களின் வெளியேற்றம், விடுவிப்பு மற்றும் வசதிகள் என்பனவற்றினை உள்ளடக்குகின்றது. அத்துடன் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களுக்கிடையே பயனுள்ள ஒத்துழைப்பு நடவடிக்கைகளையும் வழங்குகின்றது. வர்த்தக வசதியளிப்பு உடன்படிக்கையானது வெளிப்படைத்தன்மையை மேம்படுத்தவதற்கும், உலகளாவிய ரீதியில் ஈடுபடுவதற்கான வாய்ப்புக்களை அதிகரித்தல் மற்றும் தடைகள் மற்றும் தாமதங்ளுக்கான வாய்ப்புக்களை குறைக்க உதவுகின்றது.

வர்த்தக வசதியளிப்பு உடன்படிக்கையானது மூன்று பிரிவுகளை உள்ளடக்குகிறது. I ஆம் பிரிவானது வித்தியாசமான 12 பொருட்களை உள்ளடக்குவதோடு இடைநிலைப் பொருட்கள் உள்ளடங்கலாக பொருட்களை சுங்கத்திலிருந்து அகற்றுவதற்கும் விடுவிப்பதற்குமான செயற்பாடுகளை துரிதப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை உள்ளடக்கியிருக்கிறது. வர்த்தக வசதியளிப்பு உடன்படிக்கையின் II ஆம் பிரிவானது உடன்படிக்கையின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் போது வளர்ந்து வரும் மற்றும் குறைந்தபட்சம் வளர்ந்துள்ள நாடுகள் எதிர்கொள்ளும் சிரமங்களை அடையாளங் காண்பதோடு வளர்ந்துவரும் மற்றும் குறைந்தபட்சம் வளர்ந்துள்ள நாடுகளுக்கான விசேட மற்றும் வித்தியாசமான தீர்வையினையும் இவ்வுடன்படிக்கை வழங்குகிறது. இந்த விசேட மற்றும் வித்தியாசமான ஏற்பாடுகள் அனைத்து வளர்ந்துவரும் நாடுகளும் தமது கடமைகளை செயற்படுத்தும் போது உறுதியாக கைக்கொள்ளப்பட வேண்டிய விடயங்களையும் மற்றும் அவற்றினை அ, ஆ மற்றும் இ என்ற மூன்று வகைப்படுத்தலின் கீழ் உலக வர்த்தக அமைப்பிற்கு அறிவிப்பதற்கும் அனுமதிக்கிறது. மூன்றாம் பிரிவானது உலக வர்த்தக அமைப்பு மற்றும் உறுப்பு நாடுகள் என்பனவற்றில் வர்த்தக வசதியளித்தளோடு தொடர்பான நிரந்தரக் குழுவொன்றை உருவாக்குவதற்கும் உள்நாட்டு ஒருங்கிணைப்பிற்கு வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பதற்குகும் மற்றும் உடன்படிக்கையின் நிபந்தனைகளை அமுல்படுத்துவதற்குமான தேசிய குழுக்களைத் தாபிப்பதற்குமான ஏற்பாடுகளை உள்ளடக்குகிறது.

இவ்வுடன்படிக்கையில் சுங்க அகற்றல் விதிமுறைகளுடன் தொடர்புடைய பல ஏற்பாடுகள் காணப்படுவதோடு அதில் உள்ளடக்கப்பட்டுள்ள பிரதான ஏற்பாடுகளாக (அ) சுங்க அகற்றல் விதிமுறைகளுடன் தொடர்புடைய சட்டங்களை வெளியிடுவதற்கான நெறிமுறைகள், ஒழுங்குவிதிகள் மற்றும் விதிமுறைகள் (இணைய வெளியீடுகள் உள்ளடங்கலாக) (ஆ) உயர் கட்டளைகளுக்கான ஏற்பாடுகள், (இ) அபராதங்களுக்கான அறவீடுகள், கட்டணங்கள் மீதான கட்டுப்பாடு, (ஈ) பொருட்களின் முன்வரவு செயற்பாடுகள் (உ) மின்னியல் கொடுப்பனவு பாவனை, (ஊ) பொருட்களி விரைவு வெளியகற்றலுக்காக உத்தரவாத அனுமதி (எ) ‘‘அங்கீகரிக்கப்பட்ட இயக்குநர்கள்’’ திட்டத்தின் பாவனை (ஏ) ஏற்றுமதியை துரிதப்படுத்தல் (ஐ) அழுகக்கூடிய

பொருட்களின் விரைவான வெளியேற்றம் (ஓ) பொதுவான சுங்க மதிப்பீடுகளில் ஆவணங்கள் மற்றும் முறைமைகளை குறைத்தல் (ஓ) ஒரு முகச்செயல் திட்ட பாவனையை ஊக்குவித்தல் (க) நடைமுறைகளின் சீரான தன்மை (ங) பொருட்களின் தற்காலிக சேர்க்கை (ச) போக்குவரத்து நடவடிக்கைகளை எளிதாக்குதல் மற்றும் (ஞ) சுங்க ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைப்புக்கான ஏற்பாடுகள் என்பன காணப்படுகின்றன.

அரசாங்கம் வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் எதிர்பார்க்கப்படும் பொருளாதார வளர்ச்சியை அடையும் நோக்கத்தில் வர்த்தகத்தை மேம்படுத்தவும் சர்வதேச வர்த்தகத்தில் அதன் பங்குகளை அதிகரிப்பதற்கும் வர்த்தக வசதியளிப்பு உடன்படிக்கைக்கு இணங்க வர்த்தக வசதியளிப்பு நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கு முன்னுரிமை வழங்கியுள்ளது. இது தொடர்பில் வர்த்தக வசதியளிப்பு உடன்படிக்கையின் கீழ், வர்த்தகவசதி உடன்படிக்கையின் ஏற்பாடுகளைச் செயற்படுத்துவதற்கும் மற்றும் உள்நாட்டு ஒருங்கிணைப்பிற்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்குமாக உலக வர்த்தக அமைப்பிற்கான இலங்கை கடப்பாட்டிற்கு இணங்க தேசிய வர்த்தக வசதியளிப்புக் குழு (NTFC) 2016 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

தேசிய வர்த்தக வசதியளிப்புக் குழு இலங்கை சுங்கத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயம் மற்றும் வர்த்தக திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஆகியோரினால் தலைமைவகிக்கப்படுகின்றது. இது பொது துறையை பிரதிநிதித்துவப்படுத்தும் (16 ஒழுங்குபடுத்தல் முகவர் தலைவர்களையும்) தனியார் துறைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் (7 உறுப்பினர்களை வர்த்தக கூடங்களிலிருந்தும்) 23 உறுப்பினர்களை உள்ளடக்கிய குழுவாக காணப்படுகின்றது. வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம் இலங்கை தேசிய வர்த்தக வசதியளிப்புக் குழுவில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சினைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. வர்த்தக வசதியளிப்பு உடன்படிக்கை மற்றும் இலங்யின் வேறு எந்த வர்த்தக வசதியளிப்பு முயற்சிகளும் சிறப்பாக ஒருங்கிணைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக தேசிய வர்த்தக வசதியளிப்புக் குழுவுக்கு உதவும் வகையில் உலக வங்கி உதவியுடன் தேசிய வர்த்தக வசதியளிப்புக் குழுவுக்காக ஒரு செயலகம் நிறுவப்பட்டுள்ளது.

வர்த்தக வசதியளிப்பு உடன்படிக்கை அமுலாக்கத்திற்கான விரிவான செயல் திட்ட அறிக்கை தேசிய வர்த்தக வசதியளிப்பு குழு செயலகத்தினால் அனைத்து உரிய ஒழுங்கமைப்பு முகவர்களின் ஆலோசனையுடன் தயாரிக்கப்பட்டது. குறித்த ஆவணத்தில் ஒன்று திரட்டிய செயற்திட்டங்களும் அதேபோன்று தேசிய வர்த்தக வசதியளிப்பு குழுவின் அனைத்து அமுலாக்கல் முகவர்களுக்குமான தனிப்பட்ட செயற்திட்டங்களும் அடங்கியுள்ளன. இவ்வறிக்கையின் அளவீடுகள்/செயல்கள் முதன்மைபடுத்தப்பட்டு கிரமமாக அமையப் பெற்றிருக்கும். இச்செயற்றிட்ட அறிக்கை (2018 ஆம் ஆண்டிலிருந்து 2022 ஆம் ஆண்டு வரையான) 5 வருடங்களுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. இந்நடவடிக்கைக்கு உலக வங்கி குழு மற்றும் சர்வதேச வர்த்தக மையம் என்பன உதவியளித்துள்ளன.

உலக வர்த்தக அமைப்பின் வர்த்தக வசதியளிப்பு உடன்படிக்கையின் கீழ் இலங்கை அதன் செயற்பாட்டு அட்டவணையை இறுதிசெய்து அ, ஆ மற்றும் இ பிரிவுகளுடன் உலக வர்த்தக அமைப்பிற்கு ஏற்கனவே கையளித்துள்ளது. பிரிவு ''அ'' உடன்படிக்கை அமுல்படுத்தப்படும் நேரத்தில் உறுப்பினரால் நடைமுறைப்படுத்துதற்கான ஏற்பாடுகளைக் கொண்டுள்ளது. பிரிவு ''ஆ'' உடன்படிக்கை அமுல்படுத்தப்பட்டதை தொடர்ந்துவரும் மாற்றமடையக்கூடிய காலத்திற்கு பின் உறுப்பினரால் நடைமுறைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளையும் மற்றும் பிரிவு ''இ'' உடன்படிக்கை அமுல்படுத்தப்பட்டதை தொடர்ந்துவரும் மாற்றமடையக்கூடிய காலத்திற்கு பின்னரான ஒரு திகதியில் உறுப்பினரால் நடைமுறைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளையும் ஆற்றலைக் கட்டியெழுப்புவதற்கான ஆதரவு மற்றும் உதவிகளை கையகப்படுத்தக் கூடிய ஏற்பாடுகளையும் கொண்டிருக்கின்றது. இலங்கை வர்த்தக வசதியளிப்பு உடன்படிக்கையின் பிரிவு ''ஆ'' மற்றும் ''இ'' இன் கீழான அதன் கடப்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்காக தொழில்நுட்ப உதவியையும், ஆற்றலைக் கட்டியெழுப்புவதற்கான உதவியையும் உலக வங்கி குழு மற்றும் சர்வதேச வர்த்தகமையத்திலிருந்து பெற்றுவருகின்றது.

தேசிய ஒற்றைச் சாரளம் மற்றும் வர்த்தக தகவல் மையம் என்பன வர்த்தக வசதியளிப்பு உடன்படிக்கையின் செயற்திட்ட அறிக்கையின் பிரதான முன்னிலைப்படுத்தப்பட்ட அம்சங்களாகக் காணப்படுகின்றன. வர்த்தக தகவல் வலைத் தளம் 2018 ஆம் ஆண்டு யூலை மாதத்தில் தாபிக்கப்பட்டது. இலங்கையிலிருந்தும் இலங்கைக்கானதுமான ஏற்றுமதிகள் மற்றும் இறக்குமதிகளோடு சம்பந்தப்பட்ட அனைத்துத் தகவல்களுக்குமான ஒற்றைநிறுத்தல் புள்ளியாக இலங்கை வர்த்தக தகவல் வலைத் தளம் காணப்படுகின்றது. இவ்வர்த்தகத் தகவல் வலைத் தளமானது நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு உட்பட இறக்குமதி/ஏற்றுமதி செயல்முறைகளில் ஈடுபட்டுள்ள அனைத்து அரச மற்றும் அரை அரச நிறுவனங்கள் சார்பிலும் வர்த்தகத் திணைக்களத்தினால் வழி நடாத்தப்படுகிறது. மேலும், இற்றைப்படுத்தப்பட்ட சுங்க வரி மற்றும் வரி தொடர்பான தகவல்கள் நிதி அமைச்சின் (www.treasury.gov.lk) ,இலங்கை சுங்கத் திணைக்களத்தின் (www.customs.gov.lk), மற்றும் அரசாங்க அச்சகத் திணைக்களம் (www.documents.gov.lk), என்பனவற்றில் கிடைப்பனவாக உள்ளதுடன், இது தொடர்பிலான விரிவான தகவல்கள் இலங்கை வர்த்தக தகவல் தள இணையதளத்திலும் (https://srilankatradeportal.com) கிடைப்பனவாகவுள்ளன.

மேலும், கரை கடந்த வர்த்தகத்திற்கு வசதியளிப்பதற்காக எடுக்கப்பட்ட கொள்கை ரீதியான தீர்மானங்கள் மற்றம் அவற்றினை அமுல்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் என்பனவற்றினை நிதி அமைச்சு அறிவித்துள்ளது. 2018 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தில் வர்த்தகத்திற்கு வசதியளித்தளோடு சம்பந்தப்பட்ட முன்மொழிவுகளை செயறபடுத்துவது தொடர்பான முன்னேற்றம் பின்வருமாறு:

**அ) வாகன புகை போக்கி நியமங்கள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள்/ நியமங்கள்**

2018 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்ட உரையின் தொழில்நுட்பக் குறிப்புகளில் 15 ஆம் மற்றும் 16 ஆம் இலக்க உருப்படிகளுடன் சேர்த்து 19 ஆம் இலக்க முன்மொழிவிற்கமைய, குறித்த முன்மொழிவானது அமுல்படுத்தப்பட்டது.

***முன்மொழிவு இலக்கம் 19*** *- வாகன இறக்குமதிகள் மீதான கப்பலேற்றுகைக்கு முந்திய சான்றிதழ் மீள்வரைவு செய்யப்படுவதுடன் வாகனங்களின் புகை வெளியேற்றுகை மற்றும் பாதுகாப்பு சார் நியமங்களும் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.*

***தொழில்நுட்பக் குறிப்புக்கள் 15*** *- சுகாதாரம் மற்றும் சூழல் பாதுகாப்பு நடவடிகக்கைகளுக்கு அமைய யூரோ 4 இன் புகை வெளியேற்ற நியமம் அல்லது அதற்குச் சமாந்தரமாக புகை வெளியீட்டு நியமத்திற்கு கீழான மோட்டார் வாகன இறக்குமதி 2018 சனவரி மாத்திலிருந்து தடைசெய்யப்படும்.*

***தொழில்நுட்பக் குறிப்புக்கள 16*** *- பயணிகள் / பிரயாணிகளின் பாதுகாப்பினைக் கருத்தில் கொணடு, கீழ் வரும் பாதுகாப்பு அமைப்பைக் கொண்டிராத மோட்டார் வாகனங்களின் இறக்குமதி 2018 சனவரி 01 இலிருந்து தடைசெய்யப்படவுள்ளது. (அ) சாரதி மற்றும் முன் இருகக்ஸ்ப் பயணிக்கான காற்றுறைகள்இ (ஆ) எதிரப்பு பூட்டு உடைகக்ம் தொகுதி மற்றும் (இ) சாரதிக்கும் முன் இருகக்க மற்றும் பின்இருக்கை பயணிகளுக்கான மூன்று புள்ளி இருக்கைப் பட்டிகள்.*

அதன் பிரகாரம், வாகன புகை போக்கி தரநிலைகள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள்/ தரநிலைகள் என்பனவற்றின் கீழ் ஒழுங்குவிதிகளை பூர்த்திசெய்வதற்காக பொருத்தமான பங்குதாரர்களுடன் பல கூட்டத்தொடர்களை வர்த்தக மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம் நடாத்தியுள்ளது. அதனைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட விரிவான விபரங்கள் உள்ளடங்கலாக புதிய ஒழுங்குவிதிகள் தொடர்பில் பொது மக்களுக்கு விழிப்புணர்வூட்டுவதற்காக நிதி அமைச்சு சில ஊடக வெளியீடுகளையும் நடாத்தியுள்ளது. அத்துடன் ஒழுங்குவிதிகளை நடைமுறைப்படுத்துவதற்காக சம்பந்தப்பட்ட பங்குதாரர்களினால் இரண்டு செயன்முறைச்

செயற்பாட்டிற்கான அறிவுறுத்தல்களும் பின்வரும் நான்கு வர்த்தமானி அறிவித்தல்களும் வெளியிடப்பட்டுள்ளன.

- சுற்றாடல் மற்றும் மஹாவலி அபிவிருத்தி அமைச்சினால் 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 12 ஆம் திகதிய 2079/42 ஆம் இலக்க, மற்றும் 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 06 ஆம் திகதிய 2083/3 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்கள் வெளியிடப்பட்டன.

- இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினால் 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 13 ஆம் திகதிய 2079/70 ஆம் இலக்க, மற்றும் 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 10 ஆம் திகதிய 2083/37 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்கள் வெளியிடப்பட்டன.

**ஆ) பாரியளவிலான மருந்தாக்கலுக்கான முதலீடுகள், பாற்பண்ணைக் கைத்தொழில் மற்றும் திண்மக் கழிவு முகாமை என்பனவற்றிற்காக கடன் முறி வசதிகளை வழங்குதல்**

*2018 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்ட உரையின் **99 ஆம் முன்மொழிவு** - திண்மக் கழிவு முகாமைத்துவத் தொழில் முயற்சிகள், பாரிய அளவிலான மருத்துப் பொருட்களின் முதலீடுகள், மற்றும் பாற்பண்ணைக் கைத்தொழில், போன்றனவற்றிற்கான நிர்மாணக் காலப்பகுதியின் போது கடன் முறி வசதிகளின் ஊடாக இறக்குமதி செய்யப்பட்ட மூலதனப் பொருட்கள் மீதான வரி விலக்குகளை வழங்குதல்.*

அதன் பிரகாரம், பாரியளவிலான மருந்தாக்கலுக்கான முதலீடுகள், பாற்பண்ணைக் கைத்தொழில், திண்மக் கழிவு முகாமை மற்றும் மற்றும் புதுப்பிக்கத்தக்க வலு துறைகள் என்பனவற்றிற்காக கடன் முறி வசதிகளை வழங்குவதன் கீழ் ஒழுங்குவிதிகளை பூர்த்திசெய்வதற்காக பொருத்தமான பங்குதாரர்களுடன் பல கூட்டத்தொடர்களை வர்த்தக மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம் நடாத்தியுள்ளது. அதனைத் தொடர்ந்து மேற்குறித்த முன்மொழிவினைச் செயற்படுத்துவதற்காக 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 10 ஆம் திகதிய 2088/33 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது.

**இ) வியாபாரத்திலிருந்து நுகர்வோருக்கு (பீ இலிருந்து சீ) இ-வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்களுக்கு வசதியளித்தல்**

***2018 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்ட உரையின் 95 ஆம் முன்மொழிவு** - அதிகரித்துவரும் கேள்விகளைப் பூர்த்தி செய்யும் நோக்குடனும், வியாபாரத்திலிருந்து நுகர்வோருக்கு (பீ இலிருந்து சீ) இ-வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்களுக்கு வசதியளிக்கும் நோக்குடனும், இக்கொடுக்கல் வாங்கல்களை அமுல்படுத்துவதற்காக 2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01 ஆம் திகதியளவில் முதலீட்டுச் சபையினாலும் சுங்கத் திணைக்களத்தினாலும் செயன்முறைமையொன்று ஸ்தாபிக்கப்படும்.*

அதன் பிரகாரம், வியாபாரத்திலிருந்து நுகர்வோருக்கு (பீ இலிருந்து சீ) இ-வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்களுக்கு வசதியளித்தல் தொடர்பில் ஒழுங்குவிதிகளை பூர்த்திசெய்வதற்காக பொருத்தமான பங்குதாரர்களுடன் பன்னிரெண்டு கூட்டங்களை வர்த்தக மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம் நடாத்தியுள்ளது. அதனைத் தொடர்ந்து மேற்குறித்த முன்மொழிவினைச் செயற்படுத்துவதற்காக 2018 ஆம் ஆண்டு யூன் மாதம் 29 ஆம் திகதிய 2077/46 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது.

**ஈ) மோட்டார் வாகனங்களுக்காக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்கான கடன் பெறுமதி விகிதம்**

*2018 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்ட உரையின் **18 ஆம் முன்மொழிவு** - மின்வலு பேரூந்துகள் மற்றும் மின்வலு முச்சக்கர வண்டிகளுக்கான **கடன் பெறுமதி விகிதம்** 90:10 ஆக*

*திருத்தப்படவுள்ளது. இது உள்நாட்டில் பொருத்தப்பட்ட மின்வலு மகிழூர்ந்து மற்றும் பேரூந்துகளுக்கும் விஸ்தரிக்கப்படவுள்ளது.*

இலங்கை மத்திய வங்கியினால் விடுக்கப்பட்ட வேண்டுகோளினை அடிப்படையாகக் கொண்டு, தேவையான வழிகாட்டலினை வழங்குவதற்கான வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பதற்காக இலங்கை மத்திய வங்கியினை இயலுமாக்கும் வகையில் மோட்டார் வாகனங்கள் தொடர்பில் வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக கடன் பெறுமதி விகிதம் (Loan to Value) இனைச் செயற்படுத்துவதற்காக வரவுசெலவுத் திட்ட முன்மொழிவின் இலக்குடன் இணைந்த வகையில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு தெளிவுபடுத்தியுள்ளது. இம்முன்மொழிவினைச் செயற்படுத்துவதற்காக காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான 2018 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க வங்கித் தொழில் சட்ட அறிவுறுத்தல்கள் இலங்கை மத்திய வங்கியினால் வெளிடப்பட்டுள்ளன.

## 2.4 இறக்குமதித் தீர்வைக் கட்டமைப்பு

**அட்டவணை 2.7**

**2018 டிசம்பர் 31 இல் உள்ளவாறு தீர்வைக் கட்டமைப்பு**

| இல. | தீர்வை வீதம் | தீர்வை வரிசைகளின் எண். (எச்.எஸ் 2017 : 8 இல.) | சதவீதம் |
|---|---|---|---|
| 1 | இலவசம் | 4,064 | 54.5 |
| 2 | 5% | 2 | 0.0 |
| 3 | 10% | 9 | 0.1 |
| 4 | 15% | 1,542 | 20.7 |
| 5 | 25% | 25 | 0.3 |
| 6 | 30% | 1,459 | 19.6 |
| 7 | 75% | 03 | 0.0 |
| 8 | 85% | 00 | 0.00 |
| 9 | 125% | 05 | 0.1 |
| 10 | குறிப்பானது | 76 | 1.0 |
| 11 | குறிப்பானது மற்றும் மதிப்பு விகதி அளவு | 275 | 3.7 |
| **மொத்தம்** | | **7,460** | **100.0** |

*மூலம் : வியாபார மற்றும் முதலீட்டுக்கொள்கை திணைக்களம், 2018*

**அட்டவணை 2.8.**

**2011 முதல் 2018 வரை தீர்வைக் கட்டமைப்பில் செய்த மாற்றங்கள்**

| இல. | தீர்வை வகைகள் | தீர்வை வரிசைகளின் எண்ணிக்கை (8 இலக்கங்களில்) | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 2018 | 2017 | 2016 | 2015 | 2014 | 2013 | 2012 | 2011 |
| 1 | இலவசம் | 4,064 | 4,064 | 3,938 | 3,922 | 3,410 | 3,379 | 3,024 | 3,024 |
| 2 | 2.5% | | | | | | | | |
| 3 | 5% | 2 | 2 | 2 | | | | 410 | 412 |
| 4 | 6% | | | | | | | | |
| 5 | 7.5% | | | | | 188 | 184 | | |
| 6 | 10% | 9 | 9 | 9 | | | | | |
| 7 | 15% | 1,542 | 1,534 | 1,309 | 1,324 | 1,601 | 1,590 | 1,587 | 1,508 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 25% | 25 | 25 | 25 | | 1,450 | 1,415 | | |
| 9 | 28% | | | | | | | | |
| 10 | 30% | 1,459 | 1,454 | 1,430 | 1,457 | | | 1,504 | 1,323 |
| 11 | ஆடம்பர வீதங்கள் | 8 | 9 | 9 | 9 | 9 | 9 | 9 | 9 |
| 12 | குறிப்பான/ அலகு வீதங்கள் | 76 | 72 | 65 | 67 | 84 | 84 | 84 | 77 |
| 13 | குறிப்பானது அல்லது மதிப்பு விகித அளவு | 275 | 269 | 255 | 186 | 184 | 183 | 200 | 162 |
| **மொத்தம்** | | **7,460** | **7,438** | **7,042** | **6,965** | **6,926** | **6,844** | **6,818** | **6,515** |

*மூலம் : வியாபார மற்றும் முதலீட்டுக்கொள்கை திணைக்களம், 2018*

### 2.4.1 2018 இல் ஒத்திசைவான முறைக்கு புதிதாக சேர்க்கப்பட்ட தேசிய உப பிரிவுகள்

கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளவாறு வர்த்தகம், முதலீடு மற்றும் தொழிற்துறை என்பவற்றை எளிதாக்கும் விதத்தில் 2018 ஆம் ஆண்டில் மொத்தமாக 32 உப பிரிவுகள் உள்நாட்டில் உருவாக்கப்பட்டன.

**அட்டவணை 2.9**

**2018 ஆம் ஆண்டில் ஒத்திசைவான முறைமைக்கு புதிதாக சேர்க்கப்பட்ட தேசிய உப பிரிவுகள்**

| இல | எச்.எஸ் குறியீடு | விபரம் |
|---|---|---|
| 1 | 05119140 | மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற, மேலும் மீன்பிடி இரைகளாக பயன்படுத்துவதற்கு கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சினால் உறுதிப்படுத்தப்பட்ட சிறிய அளவுகளிலுள்ள கணவாய், சிப்பி மற்றும் பூ மீன் வகைகள் |
| 2 | 22029951 | தலா 100 மி.லீற்றருக்கு 6 கிராமுக்கு அதிகமாக சீனி அடங்கியவை |
| 3 | 22029959 | ஏனையன |
| 4 | 22029961 | தலா 100 மி.லீற்றருக்கு 6 கிராமுக்கு அதிகமாக சீனி அடங்கியவை |
| 5 | 22029969 | ஏனையன |
| 6 | 22029970 | தானியம், விதை அல்லது மரக்கொட்டை அடிப்படையிலான குடிபானங்கள் |
| 7 | 22029991 | தலா 100 மி.லீற்றருக்கு 6 கிராமுக்கு அதிகமாக சீனி அடங்கியவை |
| 8 | 22029999 | ஏனையன |
| 9 | 27101221 | 92 ஒக்டேன் கொண்ட பெற்றோல் |
| 10 | 27101222 | 95 ஒக்டேன் கொண்ட பெற்றோல் |
| 11 | 27101229 | ஏனையன |
| 12 | 27101941 | 10 mg/kg (ppm) க்கும் மேற்படாத அளவு கந்தகம் உள்ளடங்கியுள்ள சுபர் டீசல் |
| 13 | 27101942 | 10 mg/kg (ppm) க்கும் மேற்பட்ட ஆனால் 500mg/kg (ppm) மேற்படாத அளவு கந்தகம் உள்ளடங்கியுள்ள ஏனைய டீசல் |
| 14 | 27101949 | ஏனையன |
| 15 | 38231920 | பாம் எண்ணையக் கொழுப்பமிலங்கள் |
| 16 | 38231930 | டெலவ் கொழுப்பமிலங்கள் |
| 17 | 39205191 | 100 மீ.மீ க்கு குறையாத அளவு தடிப்புள்ளவை |
| 18 | 39205199 | ஏனையன |
| 19 | 39206311 | இலங்கை கட்டளைகள் நிறுவனம் (SLSI) மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரிந்தழியக்கூடிய மற்றும் |

| | | |
|---|---|---|
| | | உரம் தயாரிக்கக்கூடிய பிளாஸ்ரிக் |
| 20 | 39206319 | ஏனையன |
| 21 | 39206391 | இலங்கை கட்டளைகள் நிறுவனம் (SLSI) மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரிந்தழியக்கூடிய மற்றும் உரம் தயாரிக்கக்கூடிய பிளாஸ்ரிக் |
| 22 | 39206399 | ஏனையன |
| 23 | 39206911 | இலங்கை கட்டளைகள் நிறுவனம் (SLSI) மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரிந்தழியக்கூடிய மற்றும் உரம் தயாரிக்கக்கூடிய பிளாஸ்ரிக் |
| 24 | 39206919 | ஏனையன |
| 25 | 39206991 | இலங்கை கட்டளைகள் நிறுவனம் (SLSI) மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரிந்தழியக்கூடிய மற்றும் உரம் தயாரிக்கக்கூடிய பிளாஸ்ரிக் |
| 26 | 39206999 | ஏனையன |
| 27 | 39231050 | இலங்கை கட்டளைகள் நிறுவனம் (SLSI) மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரிந்தழியக்கூடிய மற்றும் உரம் தயாரிக்கக்கூடிய பிளாஸ்ரிக் |
| 28 | 39232930 | இலங்கை கட்டளைகள் நிறுவனம் (SLSI) மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரிந்தழியக்கூடிய மற்றும் உரம் தயாரிக்கக்கூடிய பிளாஸ்ரிக் |
| 29 | 39241010 | இலங்கை கட்டளைகள் நிறுவனம் (SLSI) மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரிந்தழியக்கூடிய மற்றும் உரம் தயாரிக்கக்கூடிய பிளாஸ்ரிக் |
| 30 | 39241090 | ஏனைய பிளாஸ்ரிக்குகள் |
| 31 | 65050010 | ஏதாவதொரு பொருளின் கொண்டை வலைகள் அவை வரிசைப்படுத்தப்படாவிட்டாலும் அல்லது நேர்த்தியாக்கப்படாவிட்டாலும் |
| 32 | 65050090 | ஏனையன |

*மூலம் : வியாபார மற்றும் முதலீட்டுக்கொள்கை திணைக்களம், 2018*

### 2.4.2 1962 ஆம் 19 இலக்க அரசிறை பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் திருத்தங்கள்

1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க அரசிறை பாதுகாப்பு சட்டத்தின் (சுங்க இறக்குமதி தீர்வை) கீழ் வெளியிடப்பட்ட அரசிறை பாதுகாப்புக் கட்டளையின் விபரங்கள் கீழுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளன. வர்த்தக மற்றும் கைத்தொழிலை எளிதாக்குவதற்காக அரசிறை பாதுகாப்பு சட்டத்தின் கீழ் 2018 ஆம் ஆண்டில் மொத்தமாக 09 கட்டளைகள் விடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.10**

**1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க அரசிறை பாதுகாப்பு சட்டம்**
***(சுங்க இறக்குமதி தீர்வை மாற்றங்கள்)***

| இல | RPO இல. விபரம் | வர்த்தமானி இல. மற்றும் திகதி | செயல்வலுப் பெறும் திகதி | விபரம் |
|---|---|---|---|---|
| 1. | RPO/01/2018 | 2018.03.16 ஆந் திகதியுடைய 2062/45 ஆம் இலக்க வர்த்தமானி | 17.03.2018 | ஆசிய பசுபிக் வியாபார உடன்படிக்கையின் கீழ் 4ஆம் வட்ட வரிச் சலுகைகளை அமுல்படுத்துவதற்காக 2018 ஆம் ஆண்டு ஜனவரி 30 ஆந் திகதியுடைய 18/009/719/002 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்துக்கு அமைச்சரவை வழங்கிய தீர்மானத்தினை செயல்வலுப்படுத்தும் விதத்தில் குறித்த அதே வியாபார உடன்படிக்கையின் 4ஆம் வட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பொருட்களுக்கான (HS |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | குறியீடுகள் 154 க்கு) இறக்குமதி தீர்வையானது குறித்த வர்த்தமானி அறிவித்தல் மூலம் திருத்தப்பட்டுள்ளது. அத்துடன், இவ்வர்த்தமானி மூலம் மேற்கொள்ளப்பட்ட சில திருத்தங்கள் வருமாறு: அலங்கார மீன் கைத்தொழிலுக்கு தேவையான அக்ரிலிக் பலகைகள், மீன்பிடிக்கான இரைகளாக பயன்படுத்தப் படுகின்ற சிறிய மீன், கொண்டை வலைகள் மற்றும் பிரிந்தழியக்கூடிய மற்றும் உரம் தயாரிக்கக்கூடிய பொருட்கள் என்பவற்றுக்கு புதிய HS குறியீடுகளை உருவாக்குதல், பால் கறக்கும் பசுக்களுக்கான தீவனமாக பயன்படுத்தப்பட்ட அல்பல்பா மீதான 15% தீர்வையை நீக்குதல், இறக்குமதி செய்யப்பட்ட அதிர்ஷ்டலாப சீட்டுக்கள் மற்றும் தொலைபேசி அட்டைகள் மீது விதிக்கப்பட்டுள்ள 30% அல்லது ஒரு கிலோ கிராமுக்கு ரூபா. 350 என விதிக்கப்பட்டுள்ள தீர்வையை இப்பண்டங்களின் பெறுமதி குறைக்கப்பட்ட இறக்குமதியை தடுப்பதற்காக திருத்துதல். |
| 2 | RPO/02/2018 | 2018.04.17 ஆந் திகதியுடைய 2067/02 ஆம் இலக்க வர்த்தமானி | 18.04.2018 | 2018 ஆம் ஆண்டில் அதிகளவு தங்கம் இறக்குமதி செய்யப்பட்டதனால் செலாவணி வீதம் பாதிக்கப்பட்டதாக மத்திய வங்கி அறிக்கைப் படுத்தியதனாலும் ஏனைய நாடுகளுக்கு சட்டத்துக்கு முரணாக தங்கம் போக்குவரத்து செய்யப்பட்டதாக அறிக்கைகள் சுட்டிகாட்டியதனாலும் தங்க இறக்குமதி மீதான தீர்வை பூச்சியத்திலிருந்து 15% வரை அதிகரிக்கப்பட்டது. |
| 3 | RPO/03/2018 | 2018.05.01 ஆந் திகதியுடைய 2069/02 ஆம் இலக்க வர்த்தமானி | 01.05.2018 | அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்ட 2018 ஜனவரி 16 ஆந் திகதியுடைய 18/009/719/002 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்துக் கேற்ப சிங்கப்பூர் - இலங்கை சுதந்திர வியாபார உடன்படிக்கையின் கீழ் 3,719 HS குறியீடுகள் மீதான இறக்குமதி தீர்வை நீக்கப்பட்டது. இக்கட்டளை வெளியிடப்பட்டதன் மூலம், சிங்கப்பூர் - இலங்கை சுதந்திர வியாபார உடன்படிக்கையின் கீழ் 180 HS குறியீடுகள் தவிர்த்து 3,539 HS குறியீடுகளின் மீதி பட்டியல் தீர்வையற்ற பொருட்களின் பட்டியலென பிரகடனப்படுத்தப்பட்டது. |
| 4 | RPO/04/2018 | 2018.05.02 ஆந் திகதியுடைய 2069/19 ஆம் இலக்க வர்த்தமானி | 03.05.2018 | பீடி இலைகள் மற்றும் பீடி புகையிலையின் குறைமதிப்பிட்ட இறக்குமதியினால் அரசாங்கத்துக்கு ஏற்படும் நட்டத்தை மட்டுப்படுத்தும் நோக்கில் 2018 மே 03 ஆந் திகதி முதல் செல்லுபடியாகும் விதத்தில் பீடி இலைகள் மற்றும் பீடி புகையிலையின் மீது சதவீத அடிப்படைக்கு மேலதிகமாக நிறையின் மீது சுங்க இறக்குமதி தீர்வையை விதிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |
| 5 | RPO/05/2018 | 2018.05.15 ஆந் திகதியுடைய | 16.05.2018 | உள்நாட்டு சந்தைக்கு எரிபொருள் விலை சூத்திரம் அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து 92 மற்றும் 95 ஒக்டேன் கொண்ட பெற்றோலுக்கும் சுபர் டீசல் மற்றும் வேறு டீசல் என்ற வகையில் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 2071/14 ஆம் இலக்க வர்த்தமானி | | டீசலுக்கும் வெவ்வெறாக இறக்குமதி வரியினை அறிமுகப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது. இவ்வர்த்தமானி அறிவித்தலின் மூலம் 2018 மே 16 ஆந் திகதியிலிருந்து புதிய சுங்க குறியீடுகளை உருவாக்கி எரிபொருள் விலை சூத்திரத்துடன் இயைபாக சுங்க இறக்குமதி வரி திருத்தப்பட்டது. |
| 6 | RPO/06/2018 | 2018.07.10 ஆந் திகதியுடைய 2079/32 ஆம் இலக்க வர்த்தமானி | 11.07.2018 | 2018 வரவு செலவுத் திட்ட முன்மொழிவில் அறிமுகப்படுத்தப்பட்ட சுங்கத் தீர்வையை நடைமுறைப்படுத்துவதற்கு உள்நாட்டு பழச்சாறு உற்பத்தியாளர்களின் வேண்டுகோளை கருத்திற்கொண்டு தலா 100 மி.லீற்றருக்கு 6 கிராமுக்கு அதிகமான பழச்சாறு உற்பத்திகளுக்கு (பொதுவாக பழச்சாறு உற்பத்தியில் அடங்கியுள்ள இயற்கை சீனி ஒரு லீற்றருக்கு 6 கிராம்) புதிய HS குறியீடுகள் உருவாக்கப்பட்டன. அவ்வாறே, உள்நாட்டு உற்பத்தியாளர்களின் உற்பத்தி செலவினை குறைப்பதற்காக பீடி இலைகள் மீது முந்தி இருந்த 30% தீர்வை வீதம் அல்லது ஒரு கிலோ கிராமுக்கு ரூபா. 250 என்ற இறக்குமதி மீதான தீர்வை திருத்தப்பட்டது. |
| 7 | RPO/07/2018 | 2018.07.19 ஆந் திகதியுடைய 2080/42 ஆம் இலக்க வர்த்தமானி | 20.07.2018 | இலங்கை – சிங்கப்பூர் சுதந்திர வியாபார உடன்படிக்கையின் தீர்வை தாராளமயமாக்கல் நிகழ்ச்சித்திட்டத்தின் அமுல்படுத்துகையானது 2018 மே 01 ஆந் திகதியிலிருந்து செயல்வலுப்பெறுவதுடன் ஏலவே மாற்றத்துக்கு உள்ளான 182 விடயங்கள் தவிர்த்து ஏனைய விடயங்களுக்கு RPO வழங்கப்பட்டுள்ளது. இலங்கை – சிங்கப்பூர் சுதந்திர வியாபார உடன்படிக்கையின் கீழ் மேற்கூறப்பட்ட மீதி 182 விடயங்களுக்கும் இலவச அடிப்படையில் சுங்க இறக்குமதி தீர்வை இருப்பதனால் அவற்றுக்கு சந்தைக்கு பிரவேசிப்பதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. |
| 8 | RPO/08/2018 | 2018.10.08 ஆந் திகதியுடைய 2092/8 ஆம் இலக்க வர்த்தமானி | 09.10.2018 | உள்நாட்டு சவர்க்கார உற்பத்தியாளர்களும் இறக்குமதியாளர்களும் சமமான களத்தில் செயற்படுவதனை இலகுபடுத்தும் நோக்கில் பாம் எண்ணெய் கொழுப்பமிலங்கள் மற்றும் டெலோ கொழுப்பமிலங்களுக்கு புதிய HS குறியீடுகள் உருவாக்கப்பட்டன. இறங்குதளத்தில் இறக்குமதியின் சாத்தியமான குறைம திப்பீட்டிலிருந்து உள்நாட்டு உற்பத்தியாளர் களை பாதுகாப்பதற்கு சுங்க இறக்குமதி தீர்வை திருத்தப்பட்டது. |
| 9 | RPO/09/2018 | 2018.11.15 ஆந் திகதியுடைய 2097/36 ஆம் இலக்க வர்த்தமானி | 16.11.2018 | அரசாங்கத்தின் அரசிறையை திரட்டிக் கொள்வதற்காக சூத்திரத்தின் அடிப்படையிலான சில்லறை விலைகளுக்கும் கொள்கை விலைக்கும் இடையில் காணப்பட்ட மிகை அளவை கருத்திற்கொண்டு ஒரு லீற்றருக்கான பெற்றோல் இறக்குமதி மீதான சுங்க இறக்குமதி தீர்வை திருத்தப்பட்டது. |

*மூலம் : வியாபார மற்றும் முதலீட்டு கொள்கை திணைக்களம், 2018*

### 2.4.3 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விஷேட வியாபார பண்டங்கள் அறவீட்டு சட்டம்

2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விஷேட வியாபார பண்ட அறவீட்டுச் சட்டத்தின் சட்டவாக்க ஏற்பாடுகளின் அடிப்படையில் பொருத்தமான திருத்தங்களுடன் வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவதினூடாக 2018 ஆம் ஆண்டில் தெரிவுசெய்யப்பட்ட விஷேட வியாபாரப் பண்டங்களின் இறக்குமதி மீது தனி கூட்டு வரியாக விஷேட வியாபார பண்ட அறவீடானது விதிக்கப்பட்டுள்ளது. அறுவடை காலப்பகுதியில் உள்நாட்டு உற்பத்தியாளர்கள் எதிர்கொள்ளும் இடர்களை எளிதுபடுத்தும் அதேவேளையில் நுகர்வோருக்கு தாங்கிக்கொள்ளக்கூடிய விலைகளை நிர்ணயிக்கும் விதத்தில் வழமையான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. (உதாரணமாக: உருளைக் கிழங்கு, சிவப்பு வெங்காயம் மற்றும் பெரிய வெங்காயம்) விஷேட வியாபார பண்டங்கள் அறவீட்டு சட்டத்தின் கீழ் அதனை மேம்படுத்துவதற்காக கீழுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளவாறு 2108 ஆம் ஆண்டில் மொத்தமாக 26 கட்டளைகள் மேற்கொள்ளப்பட்டன.

**அட்டவணை 2.11**

**2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விஷேட வியாபார பண்டங்கள் அறவீட்டு சட்டத்தின் கீழான தீர்வை திருத்தங்கள்**

| இல | வர்த்தமானி இல. மற்றும் திகதி | செயல்வலுப் பெறும் திகதி | பொருட்கள் | தீர்வை திருத்தங்கள் |
|---|---|---|---|---|
| 1 | 2018.01.18 ஆந் திகதிய 2054/40 ஆம் இலக்க வர்த்தமானி | 19.01.2018 | அரைக்கப்பட்ட அல்லது தூளாக்கப்பட்ட பாலாடைக்கட்டி<br><br>மாசி, உழுந்து, மிளகாய், கொத்தமல்லி, மஞ்சள், உழுந்து மா, அடைக்கப்பட்ட மீன் | வெதுப்பக கைத்தொழிலுக்கு பயன்படுத்துவதற்காக அரைக்கப்பட்ட அல்லது தூளாக்கப்பட்ட பாலாடைக் கட்டிக்கு சலுகை தீர்வை அறிமுகப்படுத்தப்பட்டதுடன், தற்போது 7 பொருட்கள் மீது விதிக்கப்பட்டுள்ள விஷேட வியாபார பண்டங்கள் அறவீட்டுத் தீர்வை மேலும் 6 மாதங்களுக்கு நீடிக்கப்பட்டது. |
| 2 | 2018.01.31 ஆந் திகதிய 2056/33 ஆம் இலக்க வர்த்தமானி | 01.02.2018 | சோளம் | CCEM இன் தீர்மானத்துக்கு அமைவாக, கோழித் தீனின் உற்பத்தியை எளிதாக்குவதற்காக சோள இறக்குமதி மீது ஒரு கிலோ கிராமுக்கு ரூ. 10 விஷேட பண்ட அறவீட்டு வரி 6 மாதங்களுக்கு விதிக்கப்பட்டது. அது 2018 ஜனவரி 31 ஆந் திகதியுடன் காலவதியாகி இருந்தது. எனவே, இறக்குமதி சோளத்தின் மீதான வாழ்க்கைச் செலவுக் குழுவின் இத்தீர்மானமானது உள்நாட்டு உற்பத்திகள் சந்தைக்கு வரும் வரையில் ஒரு மாதத்துக்கு தொடர்ந்தது. |
| 3 | 2018.02.15 ஆந் திகதிய 2058/30 ஆம் இலக்க வர்த்தமானி | 16.02.2018 | சீனி | உள்நாட்டு சந்தையின் விலை ஸ்திரதன்மையை கருத்திற்கொண்டு தற்போதுள்ள வரி வீதங்கள் மேலும் 6 மாதங்களுக்கு நீடிக்கப்பட்டன. |

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | 2059/52 ஆம் இலக்க 23.02.2018 திகதிய வர்த்தமானி | 24.02.2018 | உருளைக் கிழங்கு | உள்நாட்டு உற்பத்தியை கருத்திற்கொண்டு உள்நாட்டு விவசாயிகளை பாதுகாப்பதற்காக உருளைக் கிழங்கின் இறக்குமதி மீதான விஷேட பண்ட அறவீட்டு வரியானது கிலோ கிராம் ஒன்றுக்கு ரூ. 1 இலிருந்து கிலோ கிராம் ஒன்றுக்கு ரூ. 30 க்கு ஒரு மாத காலத்திலிருந்து செல்லுபடியாகும் விதத்தில் அதிகரிக்கப்பட்டது. |
| 5 | 2061/22 ஆம் இலக்க 07.03.2018 திகதிய வர்த்தமானி | 08.03.2018 | மெகரல் மீன், பட்டாணி, கொண்டைக்கடலை, குரக்கன் | உள்நாட்டுச் சந்தையின் விலை ஸ்திரதன்மை மற்றும் உள்நாட்டின் அடைக்கப்பட்ட மீன் கைத்தொழில் என்பவற்றை கருத்திற்கொண்டு தற்போதைய வரி வீதங்களுடனான செல்லுபடியாகும் காலம் 6 மாதங்களுக்கு நீடிக்கப்பட்டது. |
| 6 | 2063/13 ஆம் இலக்க 19.03.2018 ஆந் திகதிய வர்த்தமானி | 20.03.2018 | உழுந்து | உள்நாட்டு விவசாயிகளுக்கு நியாயமானதொரு விலையை உத்தரவாதப்படுத்துவதற்காக உழுந்து கி.கிராம் ஒன்றுக்கான ரூ.60 இறக்குமதி வரி ரூ. 100 ஆக அதிகரிக்கப்பட்டது. |
| 7 | 2064/49 ஆம் இலக்க 01.04.2018 ஆந் திகதிய வர்த்தமானி | 01.04.2018 | உருளைக் கிழங்கு, யோகட், வெண்ணெய், பூண்டு, தோடம்பழம், திராட்சை, அப்பிள், குரக்கன் மா, நிலக்கடலை, கடுகு, உப்பு | வாழ்க்கைச் செலவுக்குழுவின் பரிந்துரைகளின் படி, உருளைக் கிழங்கு இறக்குமதி மீதான நடைமுறையிலுள்ள வரி வீதம் செல்லுபடியாகும் காலத்தை 3 மாதங்களுக்கும், அரிசி இறக்குமதி மீதான நடைமுறையிலுள்ள சலுகை தீர்வை வீதங்களின் செல்லுபடியாகும் காலத்தை 31 நாட்களுக்கும், ஏனைய பொருட்களின் இறக்குமதி மீதான நடைமுறையிலுள்ள தீர்வை வீதங்களின் செல்லுபடியாகும் காலத்தை 6 மாதங்களுக்கும் நீடிக்கப்பட்டது. |
| 8 | 2069/18 ஆம் இலக்க 01.05.2018 ஆந் திகதிய வர்த்தமானி | 02.05.2018 | உருளைக் கிழங்கு, பெரிய வெங்காயம் | வாழ்க்கைச் செலவுக் குழுவின் பரிந்துரைகளின் படி, சந்தை விலை மற்றும் உள்நாட்டு விவசாயிகளின் பாதுகாப்பு என்பவற்றைக் கருத்திற்கொண்டு உருளைக் கிழங்கு மீதான இறக்குமதி வரி கிலோ கிராம் ஒன்றுக்கு ரூ. 30 இலிருந்து ரூ. 40 ஆகவும் பெரிய வெங்காயம் மீதான இறக்குமதி வரி கிலோ கிராம் ஒன்றுக்கு ரூ. 1 இலிருந்து ரூ. 40 க்கும் ஆகவும் அதிகரிக்கப்பட்டது. |
| 9 | 2070/2 ஆம் இலக்க 08.05.2018 | 08.05.2018 | மீன், பாசிப்பயறு, மங்குஸ்தான், காய்ந்த | 11 பொருட்கள் மீது நடைமுறையிலுள்ள விஷேட பண்ட அறவீட்டு வரியின் செல்லுபடியாகும் காலம் 6 மாதங்களுக்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆந் திகதிய வர்த்தமானி | | தோடம்பழம், பியர்ஸ், செறி, முந்திரி, கிவி பழம், ஏனைய பழங்கள், ஸ்பிரட் மீன், கறுவாடு | நீடிக்கப்பட்டது. |
| 10 | 2070/6 ஆம் இலக்க 09.05.2018 ஆந் திகதிய | 09.05.2018 | துவரம் பருப்பு | சர்வதேச சந்தை விலையை கருத்திற்கொண்டு அமைச்சரவை உப குழு முழு துவரம் பருப்பு மீதான இறக்குமதி வரியை கிலோ கிராம் ஒன்றுக்கு ரூ. 1 இலிருந்து ரூ. 7 ஆகவும், உடைந்த துவரம் பருப்பு மீதான இறக்குமதி வரியை கிலோ கிராம் ஒன்றுக்கு ரூ. 3 இலிருந்து ரூ. 12 ஆகவும் அதிகரிப்பதற்கு பரிந்துரை வழங்கியது. |
| 11 | 2071/85 ஆம் இலக்க 20.05.2018 ஆந் திகதிய வர்த்தமானி | 21.05.2018 | சிறிய வெங்காயம், பேரீச்சம் பழம், காய்ந்த முந்திரி, நற்சீரகம், பெருஞ்சீரகம், மாஜரீன் | 6 பொருட்கள் மீது நடைமுறையிலுள்ள விஷேட பண்ட அறவீட்டு வரியின் செல்லுபடியாகும் காலம் மேலும் 6 மாதங்களுக்கு நீடிக்கப்பட்டது. |
| 12 | 2073/37 ஆம் இலக்க 2018.05.31 ஆந் திகதிய வர்த்தமானி | 01.06.2018 | மரக்கறி எண்ணெய் | கடந்த வருடத்தின் இறுதிப் பகுதியுடன் ஒப்பிட்டு தேங்காய் மற்றும் தொடர்புடைய உற்பத்திகளின் நடைமுறையிலுள்ள சந்தை விலையை ஸ்திரப்படுத்துவதை கருத்திற்கொண்டு ஒரு கிலோ கிராம் ரூ. 20 ஆல் அதிகரிக்கப்பட்டது. |
| 13 | 2075/31 ஆம் இலக்க 14.06.2018 ஆந் திகதிய வர்த்தமானி | 14.06.2018 | முள்ளற்ற மீள் துண்டுகள், மார்லின் மீன், தோரா மீன், தேங்காய் மற்றும் உழுந்து | தெரிவுசெய்யப்பட்ட மீன் இனங்கள் மற்றும் தேங்காய்க்கான செல்லுபடியாகும் காலம் நீடிக்கப்பட்டது. வாழ்க்கைச் செலவுக் குழுவின் தீர்மானத்தைக் கருத்திற்கொண்டு உள்நாட்டு விவசாயிகளை பாதுகாப்பதற்காக உழுந்து இறக்குமதி மீதான இறக்குமதி வரி கிலோ கிராம் ஒன்றுக்கு ரூ. 100 இலிருந்து ரூ. 150 க்கு அதிகரிக்கப்பட்டது. |
| 14 | 2080/36 ஆம் இலக்க 18.07.2018 ஆந் திகதிய வர்த்தமானி | 19.07.2018 | அரைக்கப்பட்ட அல்லது தூளாக்கப்பட்ட பாலாடைக்கட்டி, மாசி, மிளகாய், மஞ்சள், உழுந்து, அடைக்கப்பட்ட மீன் | 7 பண்டங்கள் மீது நடைமுறையிலுள்ள விஷேட பண்ட அறவீட்டு வரியின் செல்லுபடியாகும் காலம் மேலும் ஒரு வருடம் நீடிக்கப்பட்டது. |
| 15 | 2082/31 ஆம் இலக்க 01.08.2018 ஆந் திகதிய | 01.08.2018 | அனைத்து வகையான மீன் இனங்கள் | அனைத்து வகையான மீன் இனங்களின் இறக்குமதி மீதான வரி வீதம் 10% ஆக அல்லது கிலோ கிராம் ஒன்றுக்கு ரூ. 100 இலிருந்து ரூ. 25 ஆக இரண்டு மாதங்கள் செல்லுபடியாகும் விதத்தில் |

| | | | | |
|---|---|---|---|---|
| | வர்த்தமானி | | | குறைக்கப்பட்டது. இதனால் இலங்கை சுங்கத்துக்கு மீன் இனங்கள் மீது இரண்டு விஷேட பண்ட அறவீட்டு வரிகளை விதிக்க முடிந்தது. ஏனெனில், இவ்வகை மீன் பனிக்கட்டியினால் உறைய வைக்கப்பட்டிருப்பதனால் அவற்றின் இறக்குமதியை பரீட்சிப்பது கடினமாக இருந்தது. |
| 16 | 2083/9 ஆம் இலக்க 2018.08.08 ஆந் திகதிய வர்த்தமானி | 09.08.2018 | சோளம் | விவசாய அமைச்சின் பரிந்துரையை கருத்திற்கொண்டு விலங்குணவுக்கு தேவைப்படுகின்ற மேலதிக உணவினை வழங்குவதனை உறுதிப்படுத்துவதற்கு சோள இறக்குமதி மீது விஷேட பண்ட அறவீட்டு வரி கிலோ கிராம் ஒன்றுக்கு ரூ. 10 அறிமுகப்படுத்தப்பட்டது. |
| 17 | 2084/30 ஆம் இலக்க 16.08.2018 ஆந் திகதிய வர்த்தமானி | 16.08.2018 | சீனி | சீனி (வெள்ளை சீனி ரூ. 31, சிவப்பு சீனி ரூ. 33) மீது நடைமுறையிலுள்ள விஷேட பண்ட அறவீட்டு வரியின் செல்லுபடியாகும் காலம் மேலும் 6 மாதங்கள் நீடிக்கப்பட்டது. |
| 18 | 2085/36 ஆம் இலக்க 25.08.2018 ஆந் திகதிய வர்த்தமானி | 25.08.2018 | மரக்கறி/ சமையல் எண்ணெய் | சர்வதேச சந்தையின் கீழ் நோக்கிய போக்கு மற்றும் உள்நாட்டு தேங்காய் விலைக் குறைப்பு என்பவற்றை கருத்திற்கொண்டு சமையல் எண்ணெய் இறக்குமதி மீதான வரியை கிலோ கிராம் ஒன்றுக்கு ரூ. 20 இனால் அதிகரிக்கப்பட்டது. |
| 19 | 2087/76 ஆம் இலக்க 07.09.2018 ஆந் திகதிய வர்த்தமானி | 07.09.2018 | மெகரல் மீன், பட்டாணி, கொண்டைக் கடலை கௌபி, குரக்கன் | உள்நாட்டு சந்தை விலை ஸ்திரதன்மை மற்றும் உள்நாட்டு அடைக்கப்பட்ட மீன் கைத்தொழில் என்பவற்றைக் கருத்திற்கொண்டு நடைமுறையிலுள்ள தீர்வை வீதங்கள் ஒரு வருடத்துக்கு நீடிக்கப்பட்டது. |
| 20 | 2089/19 ஆம் இலக்க 17.09.2018 ஆந் திகதிய வர்த்தமானி | 18.09.2018 | சீனி | விஷேட பண்ட அறவீட்டு வரி நீக்கப்பட்டது. (கிலோ கிராம் ஒன்றுக்கு ரூ. 30 சுங்கத்தீர்வை அறிமுகப்படுத்தப்பட்டதுடன், சுங்க இறக்குமதி தீர்வை, PAL மற்றும் தேச கட்டுமான வரி என்பனவும் உபயோகிக்கப்பட்டன) |
| 21 | 2090/47 ஆம் இலக்க 29.09.2018 ஆந் திகதிய வர்த்தமானி | 01.10.2018 | மீன், யோகட், வெண்ணெய், பூண்டு, தோடம்பழம், திராட்சை, அப்பிள், குரக்கன் மா, | அனைத்து வகையான மீன் இனங்களின் இறக்குமதி மீதான விஷேட பண்ட அறவீட்டு வரி கிலோ கிராம் ஒன்றுக்கு ரூ. 25 இலிருந்து 10% ஆக அல்லது ரூ. 100 ஆக அதிகரிக்கப்பட்டதுடன், பிற 11 பண்டங்கள் மீது நடைமுறையிலுள்ள விஷேட பண்ட |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | நிலக்கடலை, கடுகு, உப்பு | அறவீட்டு வரி தொடர்ந்து ஒரு வருட காலத்துக்கு செல்லுபடியாகும். |
| 22 | 2095/16 ஆம் இலக்க 01.11.2018 ஆந் திகதிய வர்த்தமானி | 02.11.2018 | உருளைக் கிழங்கு, பெரிய வெங்காயம் | உள்நாட்டு விவசாயிகளை பாதுகாப்பதற்காக செல்லுபடியாகும் காலம் 31 தினங்களுக்கு நீடிக்கப்பட்டது. |
| 23 | 2095/21 ஆம் இலக்க 01.11.2018 ஆந் திகதிய வர்த்தமானி | 02.11.2018 | கொண்டை கடலை, உழுந்து, துவரம்பருப்பு மற்றும் சீனி | கொண்டைக் கடலை மற்றும் துவரம் பருப்பின் இறக்குமதி தீர்வை வீதம் கிலோ கிராம் ஒன்றுக்கு ரூ. 5 இனாலும், உழுந்து மீதான வரி கிலோ கிராம் ஒன்றுக்கு ரூ. 25 இனாலும் குறைக்கப்பட்டது. வெள்ளை சீனி கிலோ கிராம் ஒன்றுக்கு ரூ. 32 உம் சிவப்பு சீன் கிலோ கிராம் ஒன்றுக்கு ரூ. 35 உம் விஷேட பண்ட அறவீட்டு வரி மீளவும் விதிக்கப்பட்டது. |
| 24 | 2096/21 ஆம் இலக்க 07.11.2018 ஆந் திகதிய வர்த்தமானி | 08.11.2018 | பாசிப்பயறு, மங்குஸ்தான், காய்ந்த தோடம்பழம், பியர்ஸ், செறி, முந்திரி, கிவி பழம், மாதுளை, ஸ்பிரட் மீன், கறுவாடு | 10 பண்டங்கள் மீது நடைமுறையிலுள்ள விஷேட பண்ட அறவீட்டு வரியின் செல்லுபடியாகும் காலம் மேலும் ஒரு வருடம் நீடிக்கப்பட்டது |
| 25 | 2098/27 ஆம் இலக்க 23.11.2018 ஆந் திகதிய வர்த்தமானி | 24.11.2018 | வடானா | வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கு வடானா இறக்குமதி மீதான வரி கிலோ கிராம் ஒன்றுக்கு ரூ. 10 இனால் குறைக்கப்பட்டது. |
| 26 | 2100/2 ஆம் இலக்க 03.12.2018 ஆந் திகதிய வர்த்தமானி | 03.12.2018 | உருளைக் கிழங்கு, பெரிய வெங்காயம் | வாழ்கைச் செலவைக் குறைப்பதற்கும் உள்நாட்டு உற்பத்தியாளர்களின் குறைந்த விளைச்சலையும் கருத்திற்கொண்டு உருளைக் கிழங்கு மற்றும் பெரிய வெங்காயம் மீதான இறக்குமதி வரி வீதம் கிலோ கிராம் ஒன்றுக்கு ரூ. 20 இனால் குறைக்கப்பட்டது. |

*மூலம் : வியாபாரம் மற்றும் முதலீட்டு கொள்கை திணைக்களம், 2018*

## 2.5 சுங்க களஞ்சியசாலைகள்

சுங்கக் களஞ்சியசாலைகள் அல்லது கிடங்குகள் என்பது தீர்வை சரக்குகளை களஞ்சியப்படுத்தக்கூடிய, கையாளக்கூடிய அல்லது தீர்வை செலுத்தாது உற்பத்தி

செயற்பாடுகளை மேற்கொள்ள முடியுமான ஒரு கட்டிடம் அல்லது பாதுகாப்பானதொரு பிரதேசம் ஆகும். அது அரசாங்கத்தினால் அல்லது தனியார் முயற்சியாளரினால் நிர்வகிக்கப்படும்.

சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 69 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், சுங்க பணிப்பாளர் நாயகத்தினால் குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு குறிப்பான நோக்கங்களுக்காக தீர்வை வரி மற்றும் கட்டணங்களை அறவிட்டதன் பின்னர் இறக்குமதிப் பொருட்களை கிடங்குகளில் களஞ்சியப்படுத்தவோ அல்லது வரி செலுத்தாத பண்டங்களாக வைத்திருப்பதற்கோ கௌரவ நிதி அமைச்சரின் அனுமதிக்குட்பட்டு கிடங்குகள் அல்லது இடங்கள் பெயரிடப்படும்.

சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 84 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் ஆர்வம் செலுத்தி சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 69 ஆம் பிரிவின் பிரகாரம் தாபிக்கப்பட்டுள்ள ஏதாவதொரு கிடங்கில் பண்டங்களை தயாரித்தல், உற்பத்தி செய்தல் அல்லது ஒன்று சேர்த்தல் போன்ற நடவடிக்கைகளுக்கு அனுமதி வழங்குவதற்கான சட்ட அங்கீகாரம் சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு உண்டு. தற்போது பின்வரும் கிடங்கு வகைகள் பேணப்பட்டு வருகின்றன:

- உள்நாட்டு பாவனைக்கும் மீள் ஏற்றுமதிக்கும் சீனி, அரிசி உட்பட பண்டங்களை வழங்குவதற்கான கிடங்குகள்
- ஏற்றுமதி நோக்கிலான தொழில் முயற்சிகளுக்கு பொருட்களை வழங்குவதற்கான கிடங்குகள்
- சேவை கிடங்குகள், ஊட்டி கிடங்குகள் மற்றும் துறைமுகத்தில் அல்லது விமாநிலையத்திலுள்ள தீர்வையற்ற கடைத்தொகுதிகள்
- கப்பல்கள்/ விமானங்களுக்கு பண்டங்களை வழங்குவதற்கான கிடங்குகள்
- சுங்க உற்பத்திக் கிடங்குத் திட்டத்தின் கீழுள்ள கிடங்குள்
- பன்னாட்டு ஒருங்கிணைப்புக்கான கிடங்குகள்
- எடுத்துச்செல்லாத பயணிகளின் பொதிகளை அனுமதிப்பதற்கான கிடங்குகள்
- கடுகதி சரக்குகளின் அனுமதிக்கான கிடங்குகள்

சுங்க வரி செலுத்தாத பொருட்களை கிடங்கில் களஞ்சியப்படுத்தும் வசதியை நிறுவுவதற்கு அல்லது வேறு இடத்தில் அமைப்பதற்கு சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களுக்கு சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் பரிந்துரை கிடைக்கப்பெற்றுள்ளதுடன் குறித்த விண்ணப்பங்கள் கௌரவ நிதி அமைச்சரின் அனுமதிக்காக இத்திணைக்களத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## 2.6 மத்திய வங்கி விடயங்கள்

1953 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டமானது 2017 நவம்பர் மாதத்தில் இரத்து செய்யப்பட்டதனால், வெளிநோக்கிய முதலீடுகளுக்கான கோரிக்கைகளோ, இலங்கைக்கு வெளியே இருந்து விட்டுவிடல்களோ மற்றும் 1953 ஆம் ஆண்டின் வெளிநாட்டு செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்துக்கு முரணாக செயற்பட்டதனால் அப்போதைய வெளிநாட்டு செலாவணி கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினால் விதிக்கப்பட்ட

தண்டப்பணத்தை நீக்குவதற்கு/ குறைப்பதற்கு முதலீட்டாளர்கள், அதிகாரம் பெற்ற வர்த்தகர்கள், பணம் பரிமாற்றுபவர்கள் போன்றவர்களிடமிருந்து இத்திணைக்களத்துக்கு முறையீடுகளோ கிடைக்கப்பெறவில்லை. எனினும், இத்திணைக்களமானது புதிய வெளிநாட்டு செலாவணி சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் இலங்கை மத்திய வங்கியின் பரிந்துரைகளுடன் வெளிநாட்டு மூலங்களிலிருந்து கடன்களைப் பெற்றுக்கொள்வதற்கு கௌரவ நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரின் அங்கீகாரத்தினைப் பெறுவதற்கு ஆறு முதலீட்டாளர்களுக்கும், இலங்கை அரசாங்கத்துக்கு 04 தடவைகளும் மற்றும் மூன்று அரச வங்கிகளுக்கும் தனது ஒத்துழைப்பினை வழங்கியுள்ளது.

## அட்டவணை 2.12

## 2017 இன் 12 ஆம் இலக்க வெளிநாட்டு செலாவணி சட்ட ஏற்பாடுகளின் கீழ் கௌரவ நிதி அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்ட அங்கீகாரங்களின் எண்ணிக்கை

| | பெயர் | தொகை | காரணம் | பிரிவு | குறிப்பு (இலங்கை அரசாங்கம்/ தனியார் |
|---|---|---|---|---|---|
| 1 | ஸ்டான்டர் சார்டட் வங்கியின் துபாய் சர்வதேச நிதி மத்திய நிலைய கிளையிலிருந்து 4 மில்லியன் அமெரிக்க டொலர் கடனை நேரடியாக வரையறுக்கப்பட்ட சியம் சிட்டி சிமன் தனியார் கம்பனியின் கணக்கில் வரவு வைப்பதற்கு | 4 மில்லியன் அமெரிக்கா டொலர் | | | தனியார் |
| | டோக்கியோவில் அமைந்துள்ள சீபுஷின்கின் வங்கியிலிருந்து 120 மில்லியன் யப்பான் யென் கடனை நேரடியாக இலங்கை வரையறுக்கப்பட்ட ட்ரீ ப்ரீ ஒப் லய்ப் நிறுவனத்தின் கணக்கில் வரவு வைப்பதற்கு | 120 மில்லியன் யப்பான் யென் | | | தனியார் |
| | வரையறுக்கப்பட்ட டீ ட்ரஸ்ட் தனியார் நிறுவனம் ஈராக்கை சேர்ந்த தனது பங்காளரான திரு. ஆமின் அபீத் அவர்களிடமிருந்து (திரு. அபீத் அவர்களுக்கு ஈராக்கின் சட்டத்தின் காரணமாக நேரடியாக பணத்தை மாற்றல் செய்ய முடியாது) 400,000 அமெரிக்க டொலரை கடனாக அந்நிறுவனத்தின் கணக்குக்கு நேரடியாக வரவு வைப்பதற்கு | 400,000 அமெரிக்க டொலர் | | | தனியார் |
| | வரையறுக்கப்பட்ட பீஸ் எயார் தனியார் நிறுவனம் ஐக்கிய அமெரிக்காவின் PNC வங்கியிலிருந்து பெறவுள்ள 2 பில்லியன் அமெரிக்க டொலரை அதன் கணக்கில் நேரடியாக வரவு வைப்பதற்கு | 2 பில்லியன் அமெரிக்கா டொலர் | | | தனியார் |
| 2 | அன்கிரடிட்ட் பேன்க் அவுஸ்திரேலியா AG (UBAA) | யூரோ 4,928,000 | | 2017 நவம்பர் 17 ஆந் திகதிய 2045/56 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டு செலாவணி சட்டத்தின் பிரிவு | இலங்கை அரசாங்கம் |
| | ஹொங்கொங், வரையறுக்கப்பட்ட ஹொங்கொங் மற்றும் ஷென்ஹாய் பேன்கிங் கோபரேஷன் (HSBC) | 79,787,506.80 அமெரிக்க டொலர் | | | இலங்கை அரசாங்கம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | 7 (1) இன் கீழ் 2017 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கம் என வெளியிடப்பட்டது. (பிரிவு 7 உடன் இணைத்து வாசிக்கப்படும் பிரிவு 29) | |
| 3. | ஹாங்கொங், வரையறுக்கப்பட்ட ஹொங்கொங் மற்றும் ஷன்ஹாய் பேன்கிங் கோபரேஷன் (HSBC) | 72,250,000 அமெரிக்க டொலர் | தெரிவுசெய்யப்பட்ட வைத்தியசாலைகளில் சுகாதார வசதிகளை மேம்படுத்துவதற்கு | மேலே குறிப்பிட்டது | இலங்கை அரசாங்கம் |
| 4 | கடன் செயன்முறைகளுக்கு வழியமைத்து கொடுக்க சீனா அபிவிருத்தி வங்கி உள் முதலீட்டு கணக்கு திறப்பதிலிருந்து சீனா அபிவிருத்தி வங்கிக்கு விதிவிலக்களித்தல். | 1,000 மில்லியன் அமெரிக்க டொலர் | குறிப்பிடப்படவில்லை | மேலே குறிப்பிட்டது | |
| 5 | சீனாவின் வரையறுக்கப்பட்ட சைனா நஷனல் கெமிகல் இன்ஜினியரிங் இல. 14 கன்ஸ்டரக்ஸன் | 43,775 அமெரிக்க டொலர் | பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் 2 ஆம் படிநிலை அபிவிருத்திக் கருத்திட்டத்தின் 11 ஆம் கட்டத்தில் விமான எரிபொருள் மீள்நிரப்பல் முனையம் மற்றும் தற்போதுள்ள எரிபொருள் குழாய் அமைப்பு அபிவிருத்தி செய்தல் மற்றும் மேம்படுத்தல், மேலும், புதிய ஏப்ரன் E இல் புதிய எரிபொருள் குழாய் அமைப்பினை பொருத்துதல் | மேலே குறிப்பிட்டது | |
| | மக்கள் வங்கி | 7,725 மில்லியன் அமெரிக்க டொலர் | | மேலே குறிப்பிட்டது | |
| 6 | வரையறுக்கப்பட்ட சிடிசன் டிவலப்மன்ட் பிஸ்னஸ் பைனான்ஸ் நிறுவனம் (CDBF) ஒபெக் நிதியத்திலிருந்து கடன் வாங்குவதற்கு | 10 மில்லியன் அமெரிக்க டொலர் | சர்வதேச அபிவிருத்திக்கு CDBF இனால் திறந்து நிர்வகிக்கவுள்ள வியாபார வெளிநாட்டு நாணய கணக்கில் OFID இலிருந்து வரவு வைப்பதற்கு | மேலே குறிப்பிட்டது | |
| 7 | தேசிய சேமிப்பு வங்கி ஜேர்மன் கொமர்ஸ் வங்கி AG இலிருந்து மத்திய வங்கியின் உள் முதலீட்டு கணக்கினூடாக வழமையான கடன் செயன்முறைகள் மற்றும் மீளசெலுத்தல் முறைகளை | 100 மில்லியன் அமெரிக்க டொலன் | குறிப்பிடப்படவில்லை | மேலே குறிப்பிட்டது | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பின்பற்றாது 100 மில்லியன் அமெரிக்கா டொலர்களை பெற்றுக்கொள்வதற்கு | | | | |
| 8 | வரையறுக்கப்பட்ட ட்ரீ ஒப் லய்ப் நிறுவனம் (TLPL) யப்பான் சீபுஷின்கின் வங்கியிலிருந்து 2% வருடாந்த வட்டியுடன் 40.0 மில்லியன் யப்பான் யென்களைப் பெற்றுக்கொள்வதற்கு | 40.00 மில்லியன் யப்பான் யென் | தமது வியாபாரத்தை அபிவிருத்தி செய்யவும் மேலும் விரிவாக்கவும் | மேலே குறிப்பிட்டது | தனியார் |
| 9 | இலங்கை பாடா பாதணிகள் கம்பனி தனது தாய் கம்பனியான பபின் நெதர்லாந்து கம்பனியிலிருந்து (BAFIN) வட்டியில்லா முறையில் உள்நோக்கிய முதலீட்டு கணக்கினூடான வழமையான கடன் செயன்முறைகள் மற்றும் மீள செலுத்துதல் என்பவற்றை பின்பற்றாது 600,000 அமெரிக்க டொலரைப் பெற்றுக்கொள்ளல் | 600,000 அமெரிக்க டொலர் | | மேலே குறிப்பிட்டது | தனியார் |
| 10 | ஏற்றுமதி கடன் வசதி என்ற வகையில் டச்சு வங்கி ஏஜீ யின் லன்டன் கிளை, வரையறுக்கப்பட்ட MUFG வங்கி, வரையறுக்கப்பட்ட மிட்சுபிஷி UFG மற்றும் ஐக்கிய இராச்சியத்தின் எக்ஸ்போர்ட் கிரடிட் கரன்டி திணைக்களம் என்பவற்றிலிருந்து GBP 39,471,355.44 க்கு சமமான அமெரிக்க டொலரை கடனாக பெற்றுக்கொள்வதற்கு.<br><br>வர்த்தக வசதி என்ற வகையில் டச்சு வங்கி ஏஜீ யின் லன்டன் கிளையிலிருந்து GBP 9,867,838.86 க்கு சமமான அமெரிக்க டொலரை கடனாக பெற்றுக்கொள்வதற்கு | GBP 39,471,355.44<br><br>GBP 9,867,838.86 | நாட்டின் தூர கஷ்டப் பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதற்காக பாலங்களை நிர்மாணிப்பதற்கு 2014 – 2015 இல் அமுல்படுத்தப்பட்ட கருத்திட்டங்களை தொடர்ந்து முன்னோக்கி நகர்த்துவதற்கும், கஷ்டப் பிரதேசங்களை நகரங்கள்/ மாநகரங்களுடன் தொடர்புபடுத்துவதற்கும், வெள்ளத்தின் போது மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும்சனசமூக தொடர்புகளை மேம்படுத்தவும் பயன்படுத்தப்பட்டது. | மேலே குறிப்பிட்டது | இலங்கை அரசாங்கம் |

## 2.7 சுங்க வழக்குகள்

சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 164 மற்றும் 165 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் பாதிப்புற்ற சாரார் மேற்கொள்ளும் முறைப்பாடுகளை கருத்திற்கொள்ளும் அதிகாரம் கௌரவ அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ளது. அதற்கேற்ப, சுங்கக் கட்டளைகள், சட்டவிரோதமான இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் போன்ற விடயங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பாக வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம் கீழ் குறிப்பிடுகின்ற நடவடிக்கைகளை மேற்கொண்டது.

பெற்றுக்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை: 42

அழைக்கப்பட்ட அவதானிப்புக்களின் எண்ணிக்கை: 46

அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளின் எண்ணிக்கை: 24

வழங்கப்பட்ட (கௌரவ அமைச்சரின்) தீர்மானங்களின் எண்ணிக்கை: 19

## 2.8 நீதிமன்ற வழக்குகள்

சுங்கக் கட்டளைச் சட்டம், விஷேட வியாபார பண்ட அறவீட்டுச் சட்டம் மற்றும் அரசிறைப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட தீர்மானம் அல்லது நடவடிக்கைகள் பாதிப்புற்ற திறத்தவர்களால் உரிய சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தப்பட்டன. நிதி அமைச்சுக்கு அல்லது திணைக்களத்துக்கு எதிராக தாக்கலிடப்பட்டிருந்த நீதிமன்ற வழக்குகள் தொடர்பாக அவதானங்கள் மற்றும் ஏனைய விடயங்களை வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம் சமர்ப்பித்தது. அண்மைய நீதிமன்ற வழக்குகள் வியாபாரம், அனுமதிப் பத்திரங்கள், வரிகள், சுதந்திர வர்த்தக உடன்படிக்கை என்பவற்றுடன் தொடர்புபட்டனவாகும். வழக்கு நடவடிக்கைகளுக்கேற்ப வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம் 11 ஆட்சேபனைகளை தயாரித்ததுடன் 24 வழக்குகளுக்கு ஆஜராகியது.

## 2.9 விஷேட கருத்திட்டங்கள்

### 2.9.1 சலுகை அடிப்படையில் மோட்டார் வாகனங்களை இறக்குமதி செய்வதற்காக அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான திட்டம்

01/2018 ஆம் இலக்க வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கை சுற்றுநிருபம் 2018 பெப்ரவரி 15 ஆந் திகதி பிரசுரிக்கப்பட்டதுடன் தகுதியான சேவைக்காலம் மற்றும் பொருத்தமான வரிகள் என்ற நியமங்களை திருத்துவதற்கு 01/2018 (1) மற்றும் 01/2018 (2) என இரு திருத்தங்கள் முறையே 2018 ஜுன் 08 மற்றும் 2018 செப்தம்பர் 11 ஆந் திகதிகளில் வெளியிடப்பட்டன. குறித்த சுற்றுநிருபத்தின் கீழ் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சிலும், மற்றும் இவ்வமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் மற்றும் நியதி சபைகளில் சேவையாற்றுகின்ற உத்தியோகத்தர்களுக்கு 764 அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஏனைய முகவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் இத்திட்டத்தின் கீழ் 2018 ஆம் ஆண்டு 13540 அனுமதிப்பத்திரங்கள் (நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு உள்ளடங்கலாக) வழங்கப்பட்டுள்ளன.

### 2.9.2 பொ.நி.சு இல. 22/99 இன் கீழ் அனுமதிப்பத்திரங்கள்

வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களமானது சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் அரச சேவையிலிருந்து ஓய்வுபெறும் போது பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 22/99 இன் கீழ் அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டது. அதற்கேற்ப, அனுமதிப்பத்திரங்கள் வழங்குவது தொடர்பாக கீழ் குறிப்பிடுகின்ற நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டன.

கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை: 427

நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை: 024

வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை: 398

கருத்திற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகள் மேன்முறையீடுகளின் எண்ணிக்கை: 013

### 2.9.3 வெளிநாட்டு விவகாரங்கள் அமைச்சின் சுற்றறிக்கை இல. 210 இன் கீழ் வெளிநாட்டு தூதுவர் சேவை உத்தியோகத்தர்களுக்கு சலுகை அடிப்படையில் மோட்டார் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான திட்டம்

இவ்வருடத்தில், ஏனைய நாடுகளில் இலங்கை தூதுவராலயங்களில் பணிபுரிகின்ற உத்தியோகத்தர்களுக்கும் வெளிநாட்டு விவகாரங்கள் அமைச்சில் பணிபுரிகின்ற தகுதியான உத்தியோகத்தர்களுக்கும் வெளிவிவகாரங்கள் அமைச்சினால் 97 அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதற்கேற்ப, இத்திணைக்களம் இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் வாகனங்களின் சுங்க விடுவிப்பினை எளிதாக்கும் வகையில் மேற்குறிப்பிட்ட அனுமதிப் பத்திரங்களுக்கு தீர்வை விலக்களிப்பு கடிதங்களை வழங்கியது.

### 2.9.4 பல்வேறு தீர்வை சலுகை திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் வாகனங்களை விடுவித்தல்

பல்வேறு தீர்வை சலுகை திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட 76 மோட்டார் வாகனங்களை இத்திணைக்களம் 2018 ஆம் ஆண்டில் விடுவித்தது.

### 2.9.5 வரி விலக்களிப்புக்கள்

சுங்கக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 235) 19 (அ) பிரிவின் கீழ் அமைச்சரவையினால் அங்கீகாரமளிக்கப்பட்ட விஷேட கருத்திட்டங்கள் உள்ளடங்கலாக கருத்திட்டங்களுக்கு அங்கீகாரமளித்தல் அடிப்படையில் சுங்க இறக்குமதி வரியினை விலக்களிப்பு செய்யமுடியும். அதற்கேற்ப, 2018 ஆம் ஆண்டில், வீதி மற்றும் அதிவேக பாதைகள், விமான நிலையம், துறைமுகம் மற்றும் மீன் பிடித்துறைமுகம், நீர் வழங்கல் மற்றும் நீர்ப்பாசனம், மின்சாரம், வீடமைப்புத் திட்டங்கள், வைத்தியசாலை மற்றும் பல்கலைக்கழக நிர்மானம் போன்ற பரப்புக்களை தழுவும் கருத்திட்டங்களுக்கு வரி விலக்களிப்புக்கள் வழங்கப்பட்டன. 2018 இல், வழங்கப்பட்ட சுங்க இறக்குமதி விலக்களிப்புக்களின் சாராம்சம் கீழுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.13**

**2018 இல், சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 19 (அ) பிரிவின் கீழ் வழங்கப்பட்ட வரி விலக்களிப்புக்கள்**

| இல. | துறை | வரி விலக்களிப்புக்களுக்கு வழங்கப்பட்ட கடிதங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | பாதுகாப்பு | 48 |
| 2 | கல்வி | 18 |
| 3 | சுகாதாரம் | 24 |
| 4 | உட்கட்டுமானம் | 510 |
| 5 | நீர் வழங்கல் | 128 |
| 6 | பிற | 540 |
| **மொத்தம்** | | **1,268** |

*மூலம் : வியாபாரம் மற்றும் முதலீட்டு கொள்கை திணைக்களம், 2018*

அதற்கேற்ப, கௌரவ நிதி அமைச்சருக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய வரி விலக்களிப்பு வழங்கலை அமுல்படுத்தும் பொறுப்பு இத்திணைக்களத்துக்கு சாட்டப்பட்டள்ளது. 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வழங்கப்பட்ட வரி விலக்களிப்புக்களின் சாராம்சம் கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.14 சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 19 (அ) பிரிவின் கீழ் வழங்கப்பட்ட பொது வரி விலக்களிப்புக்கள்**

| இல. | விடயம் | சுங்க இறக்குமதி வரி வீதம் | வரி விலக்கு (ரூ) | திரும்ப பெறக்கூடிய சுங்க இறக்குமதி வரி (ரூ.) | காலம் |
|---|---|---|---|---|---|
| 1. | டீசல் | லீற்றர் ஒன்றுக்கு ரூ.15. | லீற்றர் ஒன்றுக்கு ரூ.11. | லீற்றர் ஒன்றுக்கு ரூ.4. | 22.12.2017 முதல் 10.05.2018 வரை |
| | | லீற்றர் ஒன்றுக்கு ரூ.15. | டீசல் - லீற்றர் ஒன்றுக்கு ரூ.9.15. | டீசல் -5.85 | 11.05.2018 முதல் 15.05.2018 வரை |
| | | | சுபர் டீசல் - லீற்றர் ஒன்றுக்கு ரூ.4.45. | சுபர் டீசல் - 10.55 | |
| | | சுபர் டீசல் - லீற்றர் ஒன்றுக்கு ரூ.10.55. | வரி விலக்கு இல்லை | சுபர் டீசல் - லீற்றர் ஒன்றுக்கு ரூ.10.55. | 16.05.2018 முதல் 19.11.2018 வரை |
| | | டீசல் - லீற்றர் ஒன்றுக்கு ரூ.5.85 | டீசல் - லீற்றர் ஒன்றுக்கு ரூ.2 | டீசல் - லீற்றர் ஒன்றுக்கு ரூ.3.85 | |
| | | பிற டீசல் - லீற்றர் ஒன்றுக்கு ரூ.10.55 | வரி விலக்கு இல்லை | பிற டீசல் - லீற்றர் ஒன்றுக்கு ரூ.10.55 | |
| | | சுபர் டீசல் - லீற்றர் ஒன்றுக்கு ரூ.10.55. | வரி விலக்கு இல்லை | சுபர் டீசல் - லீற்றர் ஒன்றுக்கு ரூ.10.55. | 20.11.2018 முதல் 11.01.2019 வரை |
| | | டீசல் - லீற்றர் ஒன்றுக்கு ரூ.5.85 | டீசல் - லீற்றர் ஒன்றுக்கு ரூ.5 | டீசல் - லீற்றர் ஒன்றுக்கு ரூ.0.85 | |
| | | பிற டீசல் - லீற்றர் ஒன்றுக்கு ரூ.10.55 | வரி விலக்கு இல்லை | பிற டீசல் - லீற்றர் ஒன்றுக்கு ரூ.10.55 | |
| | | பிற டீசல் - லீற்றர் ஒன்றுக்கு ரூ.10.55 | வரி விலக்கு இல்லை | பிற டீசல் - லீற்றர் ஒன்றுக்கு ரூ.10.55 | 12.01.2019 முதல் இன்று வரை |
| | | டீசல் - லீற்றர் ஒன்றுக்கு ரூ.5.85 | டீசல் - லீற்றர் ஒன்றுக்கு ரூ.3 | டீசல் - லீற்றர் ஒன்றுக்கு ரூ.2.85 | |
| | | பிற டீசல் - லீற்றர் ஒன்றுக்கு ரூ.10.55 | வரி விலக்கு இல்லை | பிற டீசல் - லீற்றர் ஒன்றுக்கு ரூ.10.55 | |
| 2. | பெற்றோல் | லீற்றர் ஒன்றுக்கு ரூ.35 | லீற்றர் ஒன்றுக்கு ரூ.23 | லீற்றர் ஒன்றுக்கு ரூ.12 | 22.12.2017 முதல் 10.05.2018 வரை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | 92 ஒக்டேன் லீற்றர் ஒன்றுக்கு ரூ.9.58 95 ஒக்டேன் லீற்றர் ஒன்றுக்கு ரூ.9.41 | 92 ஒக்டேன் லீற்றர் ஒன்றுக்கு ரூ.25.42 95 ஒக்டேன் லீற்றர் ஒன்றுக்கு ரூ.25.59 | 11.05.2018 முதல் 15.05.2018 வரை |
| | | 92 ஒக்டேன் லீற்றர் ஒன்றுக்கு ரூ.25.42 95 ஒக்டேன் லீற்றர் ஒன்றுக்கு ரூ.25.59 பிற - லீற்றர் ஒன்றுக்கு ரூ.25.59 | 92 ஒக்டேன் லீற்றர் ஒன்றுக்கு ரூ.7 | 92 ஒக்டேன் லீற்றர் ஒன்றுக்கு ரூ.25.42 95 ஒக்டேன் லீற்றர் ஒன்றுக்கு ரூ.25.59 பிற - லீற்றர் ஒன்றுக்கு ரூ.25.59 | 16.05.2018 முதல் 01.11.2018 வரை |
| | | | 92 ஒக்டேன் லீற்றர் ஒன்றுக்கு ரூ.13 | 92 ஒக்டேன் லீற்றர் ஒன்றுக்கு ரூ.12.42 95 ஒக்டேன் லீற்றர் ஒன்றுக்கு ரூ.25.59 பிற - லீற்றர் ஒன்றுக்கு ரூ.25.59 | 02.11.2018 முதல் 15.11.2018 வரை |
| | | 92 ஒக்டேன் லீற்றர் ஒன்றுக்கு ரூ.35 95 ஒக்டேன் லீற்றர் ஒன்றுக்கு ரூ.35 பிற - லீற்றர் ஒன்றுக்கு ரூ.35 | 92 ஒக்டேன் லீற்றர் ஒன்றுக்கு ரூ.20 95 ஒக்டேன் லீற்றர் ஒன்றுக்கு ரூ.3 பிற - லீற்றர் ஒன்றுக்கு ரூ.3 | 92 ஒக்டேன் லீற்றர் ஒன்றுக்கு ரூ.15 95 ஒக்டேன் லீற்றர் ஒன்றுக்கு ரூ.32 பிற - லீற்றர் ஒன்றுக்கு ரூ.32 | 16.11.2018 முதல் 27.12.2018 வரை |
| | | | 92 ஒக்டேன் லீற்றர் ஒன்றுக்கு ரூ.20 95 ஒக்டேன் விலக்களிப்பில்லை பிற - லீற்றர் ஒன்றுக்கு ரூ.3 | 92 ஒக்டேன் லீற்றர் ஒன்றுக்கு ரூ.15 95 ஒக்டேன் லீற்றர் ஒன்றுக்கு ரூ.35 பிற - லீற்றர் ஒன்றுக்கு ரூ.32 | 28.12.2018 |
| | | | 92 ஒக்டேன் லீற்றர் ஒன்றுக்கு ரூ.20 95 ஒக்டேன் - விலக்களிப்பில்லை பிற – விளக்களிப்பில்லை | 92 ஒக்டேன் லீற்றர் ஒன்றுக்கு ரூ.15 95 ஒக்டேன் லீற்றர் ஒன்றுக்கு ரூ.35 பிற - லீற்றர் ஒன்றுக்கு ரூ.35 | 29.12.2018 முதல் 11.01.2019 வரை |
| | | | 92 ஒக்டேன் லீற்றர் ஒன்றுக்கு ரூ.19 95 ஒக்டேன் - விலக்களிப்பில்லை பிற – விலக்களிப்பில்லை | 92 ஒக்டேன் லீற்றர் ஒன்றுக்கு ரூ.16 95 ஒக்டேன் லீற்றர் ஒன்றுக்கு ரூ.35 பிற - லீற்றர் ஒன்றுக்கு ரூ.35 | 12.01.2019 இன்று வரை |
| 3. | மசகு எண்ணெய் | 15% | 3% | 12% | 02.11.2018 இன்று வரை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4. | கோதுமை தானியம் | கிலோ கிராம் ஒன்றுக்கு 15% அல்லது ரூ.12 | கிலோ கிராம் ஒன்றுக்கு ரூ.6 | கிலோ கிராம் ஒன்றுக்கு ரூ.6 | 02.08.2017 to 01.11.2018 |
| | | | கிலோ கிராம் ஒன்றுக்கு ரூ.9 | கிலோ கிராம் ஒன்றுக்கு ரூ.3 | 02.11.2018 இலிருந்து வரை |
| 5. | பால் மா | கிலோ கிராம் ஒன்றுக்கு 20% அல்லது ரூ.225 | கிலோ கிராம் ஒன்றுக்கு ரூ.223 | கிலோ கிராம் ஒன்றுக்கு ரூ.2 | 08.07.2017 to 18.09.2018 |
| | | | கிலோ கிராம் ஒன்றுக்கு ரூ.175 | கிலோ கிராம் ஒன்றுக்கு ரூ.50 | 19.09.2018 to 02.10.2018 |
| | | | கிலோ கிராம் ஒன்றுக்கு ரூ.223 | கிலோ கிராம் ஒன்றுக்கு ரூ.2 | 03.10.2018 to 16.10.2018 |
| | | | கிலோ கிராம் ஒன்றுக்கு ரூ.210 | கிலோ கிராம் ஒன்றுக்கு ரூ.15 | 17.10.2018 இலிருந்து வரை |
| 6. | முந்திரி பருப்பு | 30% | 30% | இலவசம் | 07.10.2017 to இலிருந்து வரை |
| 7. | சீனி | கிலோ கிராம் ஒன்றுக்கு ரூ.12 | கிலோ கிராம் ஒன்றுக்கு ரூ.4 | கிலோ கிராம் ஒன்றுக்கு ரூ.8 | 19.09.2018 இலிருந்து 01.11.2018 வரை |
| | | | குறிப்பு : 16.10.2018 ஆந் திகதிக்கு முன்பு துறைமுகத்திலுள்ள இறக்குமதிகள்/ இருப்புக்களுக்கு கிலோ கிராம் ஒன்றுக்கு ரூ. 12 முழுமையான விலக்களிப்பு வழங்கப்பட்டதுடன் அது 26.10.2018 வரை செல்லுபடியாகும். | | |

### 2.9.6 ஏற்றுமதி செயன்முறை திட்டத்திற்கான இறக்குமதி (TIEP)

நாட்டுக்கு போதுமான வருமானத்தை (வெளிநாட்டு செலாவணி) திரட்டுவதற்கு ஏற்றுமதிகளை ஊக்குவிக்கும் நோக்கில் ஏற்றுமதி வியாபார துணைநலன் நடவடிக்கையாக ஏற்றுமதி செயன்முறை திட்டத்திற்கான இறக்குமதித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இதனால் எதிர்பார்க்கப்படுவது யாதெனில், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கு மிகவும் குறைந்த விலையில் இயந்திரங்கள் மற்றும் மூலப்பொருட்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கி அவர்களை பலப்படுத்துவதனூடாக, அவர்களுக்கு சர்வதேச சந்தையில் போட்டியிடக்கூடியதாக இருக்கும் என்பதாகும்.

இத்திட்டமானது, ஏற்றுமதி நோக்கத்துக்காக வரி விலக்கு அடிப்படையில் உள்ளீடுகளின் இறக்குமதிக்கு தகுதியற்ற முதலீட்டுச் சபை சட்டத்தின் 16 ஆம் பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட முதலீட்டாளர்களுக்கு வசதியளிக்கின்றது. வியாபாரம் மற்றும் முதலீட்டு கொள்கை திணைக்களமானது, முதலீட்டாளர்களின் கோரிக்கைகளுக்கு அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு இலங்கை சுங்கத்திணைக்களம் மற்றும் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சுக்கு உதவுகின்றது.

## 2.10 ஏனைய அமைச்சுக்களால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கான அவதானிப்புக்களையும், இத்திணைக்களத்தினால் அமைச்சரவை விஞ்ஞாபனத்தை தயாரித்தலும்.

2018 ஆம் ஆண்டில், இத்திணைக்களத்தினால் 16 அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. மேலும், ஏனைய அமைச்சுக்களால் சமர்ப்பிக்கப்பட்ட 29 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு அவதானிப்புக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

## 2.11 சார்க் அபிவிருத்தி நிதியம் (SDF)

சார்க் அபிவிருத்தி நிதியம் என்பது கருத்திட்ட ஒத்துழைப்பினூடாக பிராந்திய கூட்டுறவு மற்றும் ஒருங்கிணைப்புக்கு பங்களிப்புக்களை மேற்கொள்வதனை இலக்காககொண்டுள்ள பிராந்திய நிதியிடல் நிறுவனமாகும். அது 2010 இலிருந்து சார்க் பிராந்தியத்தில் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கான நிதி அமைப்பாக தொழிற்படுகின்றது. குறித்த நிதியமானது சார்க் பிராந்திய மக்களின் வாழ்க்கைத்தர மேம்பாடு மற்றும் தென் ஆசியாவின் துரித பொருளாதார வளர்ச்சி, சமூக முன்னேற்றம் மற்றும் வறுமை ஒழிப்பு என்பவற்றுக்காக தொழிற்படுகின்றது.

**சார்க் அபிவிருத்தி நிதியத்திடம் மூன்று நிதியிடல் சாளரங்கள் உள்ளன**

**I. சமூக சாளரம்**

சமூக சாளரமானது அடிப்படையில் வறுமை ஒழிப்பு, கல்வியில் குவிமையப்படுத்திய சமூக அபிவிருத்தி, சுகாதாரம், மனிதவள அபிவிருத்தி, சமூகத்தில் பின்தங்கிய குழுக்களுக்கு ஒத்துழைத்தல் போன்ற கருத்திட்டங்களுக்கு நிதிகளை வழங்குகின்றது. சமூக சாளரம் அமுல்படுத்தல் முகவர்களுடன் 50:50 ஒத்துழைப்பை வழங்குகின்றது.

**II. பொருளாதார சாளரம்**

பொருளாதார சாளரமானது அடிப்படையில் வியாபாரம் மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி, விவசாய சேவைகள் துறை, விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்பம் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பல்லா பகுதிகளுடன் தொடர்புடைய உட்கட்டமைப்பல்லா கருத்திட்டங்களுக்கு நிதிகளை வழங்குகின்றது.

**III. உட்கட்டுமான சாளரம்**

உட்கட்டுமான சாளரமானது அடிப்படையில் வலு, சக்தி, போக்குவரத்து, தொலைத்தொடர்பாடல்கள், சுற்றுச்சூழல், உல்லாசதுறை மற்றும் ஏனைய உட்கட்டுமான பகுதிகளில் செயற்படுத்தும் கருத்திட்டங்களுக்கு நிதிகளை வழங்குகின்றது. பொருளாதார மற்றும் உட்கட்டுமான சாளரங்கள் கூட்டு – நிதியிடல் முறையின் கீழ் செயற்படுத்தும் 100% உத்தரவாதப்படுத்தப்பட்ட கடன்களாகும்.

சமூக சாளரத்தின் கீழ் சார்க் நாடுகளில் 13 கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. ஒவ்வொரு கருத்திட்டத்தினாலும் ஒன்றுக்கு மேற்பட்ட சார்க் நாடுகள் பயனடைந்தன.

இலங்கையில் 3 கருத்திட்டங்கள் பூர்த்திசெய்யப்பட்டிருப்பதுடன் மேலும் 3 கருத்திட்டங்கள் சார்க் அபிவிருத்தி நிதியத்தின் சமூக சாளரத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. பொருளாதார மற்றும் உட்கட்டுமான சாளரத்தின் கீழ் 2 மேம்பாட்டு கருத்திட்டங்கள் காணப்படுகின்றன.

### நடைமுறைப்படுத்தப்படுகின்ற கருத்திட்டங்கள்

1. சார்க் பிராந்தியத்தில் வீட்டினை மையப்படுத்திய வேலையாட்களுக்கு வாழ்வாதார முன்னெடுப்புக்களை பலப்படுத்துதல் (SABAH)
2. சார்க் அங்கத்துவ நாடுகளிலுள்ள பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு கட்டணம் இன்றிய உதவி அழைப்பு வசதிகள்

### பூர்த்திசெய்யப்பட்ட கருத்திட்டம்

1. நோய்த்தடுப்பு உள்ளடங்கலாக தாய் மற்றும் குழந்தை சுகாதாரத்தை பலப்படுத்துதல் (MCH)
2. சிறுவர்களுக்கெதிரான வன்முறைகளை முடிவுக்கு கொண்டுவருவதற்காக தென்னாசிய முன்னெடுப்புக்கள் (SAIEVAC)
3. சார்க் நாடுகளில் உற்பத்தி நீரேந்து பிரதேசங்களில் அறுவடைக்கு பின்னரான முகாமைத்துவமும் பழங்களுக்கான பெறுமதி சேர்க்கையும்.
4. சார்க் பிராந்திய நாடுகளில் தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களில் நீர், சுகாதாரம் மற்றும் ஆரோக்கிய சேவைகளை பலப்படுத்துதல்.

### திட்டமிடப்பட்டுள்ள கருத்திட்டங்கள்

1. சார்க் நாடுகளின் பெண் தொழில் முயற்சியாளர்களின் வலைப்பின்னல் மற்றும் இயற்றிறன் விருத்தி (சார்க் கைப்பணி அபிவிருத்தி மத்திய நிலையங்கள்)
2. மதிப்பு சங்கிலி அபிவிருத்தி மீது கவனம் செலுத்தி சிறு வேளாண்மை வியாபாரத்தினூடாக சார்க் பிராந்தியத்தில் சிறு விவசாயிகளின் வாழ்வாதார மேம்பாடு.

சார்க் அபிவிருத்தி நிதியம் பொருளாதார நிதியிடல் சாளரத்தின் கீழ் இலங்கையில் தனது நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி நிதியிடல் திட்டத்தினை அண்மையில் தொடங்கிவைத்தது. இந்நிதியம் இத்திட்டத்தின் கீழ் 10 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஒதுக்கியுள்ளதுடன் அந்நிதி வழங்கப்படவுள்ளது.

ஒட்டுமொத்த ஒருங்கிணைப்பு, கருத்திட்ட முன்மொழிவுகளின் பரிந்துரை, கருத்திட்ட முன்னேற்ற மீளாய்வு இலங்கைக்கு வருகைதரும் சார்க் அபிவிருத்தி நிதிய அதிகாரிகளுக்கு ஒத்துழைத்தல் உள்ளடங்கலாக பல்வேறு நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்காக சார்க் அபிவிருத்தி நிதியத்தின் இலங்கை ஒத்துழைப்பு முகவராக இத்திணைக்களம் தொழிற்படுகின்றது.

### சார்க் நிதிக் கூட்டங்கள்

1998 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 29 ஆந் திகதி கொழும்பில் நடைபெற்ற 10 வது சார்க் உச்சி மாநாட்டில் உடன்பட்டதன் பிரகாரம் சார்க் மத்திய வங்கி ஆளுநர்கள் மற்றும் நிதி செயலாளர்களின் பிராந்திய வலையமைப்பாக சார்க் நிதி 1998 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 09 ஆந் திகதி ஸ்தாபிக்கப்பட்டது. மேலும், 2002 ஜனவரியில் கத்மண்டுவில் நடைபெற்ற 11 வது சார்க் உச்சி மாநாட்டில் சார்க் நிதிக்கு உத்தியோகபூர்வ அங்கீகாரம் கிடைக்கப்பெற்றது.

சார்க் நிதி வலையமைப்பின் அடிப்படை குறிக்கோள் சார்க் அங்கத்துவ நாடுகளிலுள்ள மத்திய வங்கிகள் மற்றும் நிதி அமைச்சுக்களுக்கிடையில் ஒத்துழைப்பினை மேம்படுத்துவதும், பிராந்தியம் முகங்கொடுக்கின்ற பேரினப் பொருளாதார கொள்கை சவால்கள் தொடர்பான உறுப்பு நாடுகளின் பகிரப்பட்ட அனுபவங்களிலிருந்து படிப்பினைகளை கற்றுக்கொள்வதுமாகும். சார்க் நிதியத்தின் பரந்த குறிக்கோள்கள் வருமாறு:

- அதிகாரிகளின் தரிசிப்புக்கள் மற்றும் தொடர்ந்தேர்ச்சியான தகவல் பரிமாற்றம் என்பவற்றினூடாக சார்க் உறுப்பு நாடுகளின் மத்திய வங்கிகள் மற்றும் நிதி அமைச்சுக்கள் மத்தியிலான கூட்டுறவை ஊக்குவித்தல்.
- பிராந்தியத்திற்குள் வங்கியியல் சட்டவாக்கம் மற்றும் நடைமுறைகளில் ஒத்திசைவினை கருத்திற்கொள்ளலும் முன்மொழிதலும்.
- சார்க் பிராந்தியத்துடன் மிகவும் வினைதிறன்மிக்க கொடுப்பனவு முறை பொறிமுறையை நோக்கி செயற்படலும், உயர் நாணய மற்றும் பரிமாற்று ஒத்துழைப்பிற்கு அர்ப்பணித்தலும்.
- சார்க் உறுப்பு நாடுகளின் பேரின பொருளாதார கொள்கைகள் தொடர்பாக நெருக்கமான கூட்டுறவை ஏற்படுத்தலும், அனுபவங்களையும் கருத்துக்களையும் பரிமாறிக்கொள்ளலும்.
- நிதிக்கட்டமைப்பு, சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் ஏனைய சர்வதேச கடன் வழங்கும் முகவர்களிடையே ஏற்படும் பிரச்சினைகளுடன் தொடர்புடைய கலந்துரையாடல்கள் உள்ளடங்கலாக உலகளாவிய நிதி அபிவிருத்தி மற்றும் பிராந்தியத்தின் மீதான அதன் தாக்கம் தொடர்பாக ஆராய்தல்.
- சர்வதேச நிதி மற்றும் நாணய முறைமை சீர்திருத்தங்களை கண்காணித்து அவை தொடர்பாக சார்க் நாடுகளுக்கு மத்தியில் ஒரு இணக்கத்தினை ஏற்படுத்திக்கொள்ளல்.
- குறிப்பாக நிதி சேவைகளின் தாராளமயமாக்கல் சூழமைவில் பரஸ்பர நன்மைக்காக சாத்தியமான சந்தர்ப்பங்களில் சர்வதேச ரீதியாக கூட்டு மூலோபாயங்கள், திட்டங்கள் மற்றும் பொதுவாக அணுகுமுறைகளை ஏற்படுத்திக்கொள்ளல்.
- பொருளாதாரம் மற்றும் நிதி விடயங்கள் தொடர்பாக சார்க உறுப்பு நாடுகளின் நிதி அமைச்சுக்கள், மத்திய வங்கிகள் மற்றும் ஏனைய நிதி நிறுவனங்களின் ஆளணிக்கு பயிற்சிகளை வழங்குதல்
- நாணய கொள்கையின் பல்வேறு அம்சங்கள், பரிமாற்று வீத சீர்திருத்தங்கள், வங்கி மேற்பார்வை மற்றும் மூலதன சந்தைப் பிரச்சினைகள் போன்ற விடயங்களில் விஷேட

கவனம் செலுத்தி சார்க் பிராந்தியத்திலுள்ள பயிற்சி நிலையங்களின் வலையமைப்பினை கண்டறிதல், மற்றும்

- சார்க் உறுப்பு நாடுகளின் பரஸ்பர நன்மை கருதி பொருளாதார மற்றும் நிதிப் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ச்சியை ஊக்குவித்தல்.

## 3. நிர்வாகம் மற்றும் நிதிப்பிரிவு

நிர்வாக மற்றும் நிதிப் பிரிவு மனிதவளம், பௌதீக மற்றும் நிதி வளங்களுக்கு பொறுப்பாக செயற்படுகின்றது. அதற்கேற்ப, ஆட்சேர்ப்பு, பயிற்சி மற்றும் அபிவிருத்தி, மற்றும் தாபன நடவடிக்கைகள் மனித வள முகாமைத்துவத்தின் கீழ் நிறைவேற்றப்படுகின்றன. அவ்வாறே, சொத்துக்களின் கையகப்படுத்தல் மற்றும் பரிபாலனம், கொடுப்பனவுகள் மற்றும் பதிவுகள் பௌதீக மற்றும் நிதி முகாமைத்துவத்தின் கீழ் நிறைவேற்றப்படுகின்றன.

### 3.1 நிர்வாகம்

இத்திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 62 ஆகும். இதன் திணைக்களத் தலைவர் பணிப்பாளர் நாயகம் ஆகும். 2018 ஆம் ஆண்டின் இறுதியில் 12 பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டன. பதவியணியின் விபரம் அட்டவணை 3.1 இல் காட்டப்பட்டுள்ளது. மனித வள முகாமைத்துவத்துடன் தொடர்புடைய தகவல்கள் அட்டவணைகள் 3.2, 3.3, 3.4 மற்றும் 3.5 இல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 3.1**
**2018, டிசம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி**

| இல | பதவி | அங்கீகரிக் கப்பட்ட பதவியணி | தற்போதைய பதவியணி | வெற்றிட ங்கள் |
|---|---|---|---|---|
| 1 | பணிப்பாளர் நாயகம் (இ.நி.சே விஷேட தரம்) | 01 | 01 | - |
| 2 | மேலதிக பணிப்பாளர் நாயகம் (இ.நி.சே விஷேட தரம்) | 01 | 00 | 01 |
| 3 | பணிப்பாளர் (இ.நி.சே I) | 03 | 02 | 01 |
| 4 | பிரதிப் பணிப்பாளர்/உதவிப் பணிப்பாளர் (இ.நி.சே I, II) | 06 | 06 | - |
| 5 | பிரதிப் பணிப்பாளர்/உதவிப் பணிப்பாளர் (இ.தி.சே I, II) | 01 | 01 | - |
| 6 | கணக்காளர் (இ.கண.சே III) | 01 | 01 | - |
| 7 | தீர்வை பகுப்பாய்வாளர் | 02 | 00 | 02 |
| 8 | நிர்வாக உத்தியோகத்தர் (அ.மு.உ.சே விஷேட தரம்) | 01 | 01 | - |
| 9 | மொழிபெயர்ப்பாளர் | 02 | 00 | 02 |
| 10 | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப உத்தியோகத்தர் | 01 | 01 | - |
| 11 | ஆராய்ச்சி உதவியாளர்/ அபிவிருத்தி உத்தியோகத்தர் | 08 | 07 | 01 |
| 12 | அரச முகாமைத்துவ உதவியாளர் | 20 | 19 | 01 |
| 13 | சாரதி | 07 | 05 | 02 |
| 14 | அலுவலக பணி உதவியாளர் | 08 | 06 | 02 |
| | **மொத்தம்** | 62 | 50 | 12 |

*மூலம் : வியாபார மற்றும் முதலீட்டு கொள்கை திணைக்கம் 2018*

**அட்டவணை 3.2**
**2018 இல் திணைக்களத்தில் இணைந்து கொண்ட உத்தியோகத்தர்கள்**

| இல. | பெயர் | பதவி | இணைந்த திகதி |
|---|---|---|---|
| 01 | திரு. எம்,கே.பி குமார | பணிப்பாளர் | 22.03.2018 |
| 02 | திரு. ஜே.ஆர்.சீ ஜயதிலக | பணிப்பாளர் | 08.03.2018 |
| 03. | திரு. எஸ்.ஏ சேனாநாயக | உதவிப் பணிப்பாளர் | 26.07.2018 |
| 04 | திரு. எச்.ஜீ.என் ஆசிரி | உதவிப் பணிப்பாளர் | 23.02.2018 |
| 05 | செல்வி எஸ்.ஜீ.எம்.ஏ.பி சேனாரத்ன | கணக்காளர் | 16.02.2018 |
| 06 | திரு. எஸ்.எஸ் ரனவீர | அரச முகாமைத்துவ உதவியாளர் | 02.03.2018 |
| 07 | திரு. டீ.பீ.என் தொலகே | அரச முகாமைத்துவ உதவியாளர் | 06.03.2018 |
| 08 | திருமதி. பீ.ஆர் சான்தி | அரச முகாமைத்துவ உதவியாளர் | 07.03.2018 |
| 09 | செல்வி எல்.எஸ்.ஜீ பெரேரா | அரச முகாமைத்துவ உதவியாளர் | 23.05.2018 |
| 10 | செல்வி எம்,ஆர்எல்.ஜே மதுபாஷினி | அரச முகாமைத்துவ உதவியாளர் | 01.06.2018 |
| 11 | திரு. ஏ.ஏ.டீ.டீ.பீ அதபத்து | அரச முகாமைத்துவ உதவியாளர் | 03.10.2018 |
| 12 | செல்வி எஸ்.ஜீ.எம்.எஸ்.எஸ் திலகசிறி | அரச முகாமைத்துவ உதவியாளர் | 07.12.2018 |
| 13 | திரு. எச்.எல்.என் பெரேரா | சாரதி | 26.03.2018 |

*மூலம் : வியாபார மற்றும் முதலீட்டு கொள்கை திணைக்கம் 2018*

**அட்டவணை 3.3**
**2018 இல் திணைக்களத்திலிருந்து இடமாற்றம் பெற்று சென்ற உத்தியோகத்தர்கள்**

| இல. | பெயர் | பதவி | |
|---|---|---|---|
| 01 | திரு. கே.ஏ விமலேந்திரராஜா | பணிப்பாளர் நாயகம் | 22.01.2018 |
| 02 | திருமதி. எம்.என்.டீ குணரத்ன | பணிப்பாளர் | 12.03.2018 |
| 03 | திரு. எம்.டீ.ஐ.சீ முரகே | பணிப்பாளர் | 08.03.2018 |
| 04 | திருமதி. டீ.ஐ.டீ.எஸ் விஜேசிங்ஹ | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 23.08.2018 |
| 05 | திரு. சீ.பீ.கே விஜேசூரிய | அரச முகாமைத்துவ உதவியாளர் | 28.02.2018 |
| 06 | திருமதி எம்.ஏ.டீ.எஸ் மல்லவ ஆரச்சி | அரச முகாமைத்துவ உதவியாளர் | 28.02.2018 |
| 07 | திருமதி எம்.ஜீ.எம்.டீ விமலரத்ன | அரச முகாமைத்துவ உதவியாளர் | 03.08.2018 |
| 08 | திரு. டீ.எம் அமரதாஸ | அரச முகாமைத்துவ உதவியாளர் | 31.08.2018 |
| 09 | திருமதி. எம் கிருபா | அரச முகாமைத்துவ உதவியாளர் | 28.12.2018 |
| 10 | திரு. ஏ.கே.பீ.ஆர் உபேசேகர | அலுவகல உதவியாளர் சேவை | 01.10.2018 |
| 11 | திருமதி டப்.ஜீ.எம் குணவர்தன | அலுவலக உதவியாளர் சேவை | 01.10.2018 |

*மூலம் : வியாபார மற்றும் முதலீட்டு கொள்கை திணைக்கம் 2018*

**அட்டவணை 3.4**

**2018 ஆண்டில் வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்/ செயலமர்வுகள் மற்றும் கூட்டங்களில் பங்குபற்றியோர்**

| பதவி | பெயர் | நாடு | நோக்கம் | காலம் |
|---|---|---|---|---|
| பணிப்பாளர் நாயகம் | திரு. சீ ஜயசூரிய | பூட்டான் | பிரதிநிதித்துவம் | 16.03.2018<br>19.03.2018 |
| | | தாய்லாந்து | பிரதிநிதித்துவம் | 18.09.2018<br>21.09.2018 |
| பணிப்பாளர் | திரு. தர்ஷன விஜேவர்தன | இந்தியா | பிரதிநிதித்துவம் | 02.07.2018<br>04.07.2018 |
| | | இந்தியா | பிரதிநிதித்துவம் | 21.12.2018<br>22.12.2018 |
| | திரு. எம்.கே.பீ குமார | நேபாளம் | பிரதிநிதித்துவம் | 21.07.2018<br>27.07.2018 |
| | திரு. ஜே.ஆர்.சீ ஜயதிலக | இந்தியா | பிரதிநிதித்துவம் | 02.07.2018<br>04.07.2018 |
| | | மலேசியா | பயிற்சி | 17.09.2018<br>23.09.2018 |
| | | பங்களாதேஷ் | பிரதிநிதித்துவம் | 18.11.2018<br>19.11.2018 |
| | | இந்தியா | பிரதிநிதித்துவம் | 18.12.2018<br>20.12.2018 |
| உதவிப் பணிப்பளார் | திரு. ஜீ.டீ.எஸ்.பீ குமார | சிங்கப்பூர் | பயிற்சி | 21.01.2018<br>16.02.2018 |
| | திரு. ஆர்.எல் வீரசேகர | இந்தியா | பிரதிநிதித்துவம் | 01.08.2018<br>19.08.2018 |
| | திரு. எச்.ஜீ.என் ஆசிரி | சீனா | பயிற்சி | 08.10.2018<br>28.10.2018 |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் | திரு. கே.டீ.ஜே வசந்த | இந்தியா | பயிற்சி | 09.07.2018<br>20.07.2018 |
| | திரு. பீ.டப்.ஜே பண்டார | சீனா | பயிற்சி | 23.05.2018<br>12.06.2018 |
| | செல்வி கே.எம்.ஜீ.ஏ கஸ்தூரி | சீனா | பயிற்சி | 23.05.2018<br>12.06.2018 |

*மூலம் : வியாபார மற்றும் முதலீட்டு கொள்கை திணைக்கம் 2018*

**அட்டவணை 3.5**

**2018 ஆம் ஆண்டில் உள்நாட்டு பயிற்சி நெறிகள்/ கருத்தரங்குகளில் பங்குபற்றியோர் விபரம்**

| பதவி | பெயர் | கற்கைநெறி | காலம் |
|---|---|---|---|
| பணிப்பாளர் நாயகம் | திரு. சீ ஜயசூரிய | நாடாளாவிய சேவையின் விஷேட தர அலுவலர்களுக்கு டோஸ்ட்மாஸ்டர் இன்டர்நஷனல் உடன் இணைந்து நடத்திய பேச்சுக்கலை | 26.03.2018 முதல் 10 வாரங்களுக்கு |
| பணிப்பாளர் | திரு. எம்.கே.பீ குமார | அரச கடன் முகாமைத்துவம் தொடர்பான செயலமர்வு | 30.07.2018<br>10.08.2018 |
| | | பேச்சுக் கலையினூடாக வினைதிறன்மிகு தொடர்பாடல் திறன்களும் ஆளுமை விருத்தியும் | 04.10.2018 |
| | | விலைமனுகோரல் மதிப்பீடு தொடர்பான செயலமர்வு | 16.10.2018 |
| | திரு. ஜே.ஆர்.சீ ஜயதிலக | வியாபார தீர்வுகள் (பொருட்கள் மற்றும் செயன்முறைகள்) தொடர்பான வீடியோ அடிப்படையிலான பயிற்சிநெறி | 14.05.2018 முதல் 10 தினங்கள் |
| | | இ.நி.சே முதலாம் வகுப்பு உத்தியோகத்தர்களுக்கான இயற்றிறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டம் - மூலோபாய தலைமைத்துவ மொடியூல் | 14.08.2018<br>17.08.2018 |
| | | விலைமனுகோரல் மதிப்பீடு தொடர்பான | 16.10.2018 |

| | | | |
|---|---|---|---|
| | | செயலமர்வு | |
| உதவிப் பணிப்பாளர் | திருமதி எம்.ஏ.சீ.என் செனவிரத்ன | இ.நி.சே மூன்றாம் வகுப்பு உத்தியோகத்தர்களுக்கான இயற்றிறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டம | 14.09.2018<br>18.09.2018 |
| | | விலைமனுகோரல் மதிப்பீடு தொடர்பான செயலமர்வு | 16.10.2018 |
| | | திறைசேரி திணைக்களத்தில் ஒருங்கிணைந்த திறைசேரி முகாமைத்துவ முறைமையை செயற்படுத்துதல் | 11.11.2018<br>14.11.2018 |
| | திருமதி எச்.ஜீ.டீ ப்ரசங்கிகா | பேரினப்பொருளாதார ஆய்வு | 21.08.2018<br>25.08.2018 |
| | | ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் மேற்கு நாடுகளிலிருந்து மருந்து மாதிரிகளின் பெறுகைக்காக ஒரு சாதனம் என்ற வகையில் சட்டக உடன்படிக்கை தொடர்பான விஷேட விரிவுரை | 05.01.2018 |
| | | நாடாளாவிய சேவையின் விஷேட தர அலுவலர்களுக்கு டோஸ்ட்மாஸ்டர் இன்டர்நஷனல் உடன் இணைந்து நடத்திய பேச்சுக்கலை | 08.06.2018<br>09.06.2018 |
| | திரு. ஜீ.டீ.எஸ்.பீ குமார | வியாபார தீர்வுகள் (பொருட்கள் மற்றும் செயன்முறைகள்) தொடர்பான வீடியோ அடிப்படையிலான பயிற்சிநெறி | 14.05.2018 |
| | | உலக வர்த்தகத்துக்கு ஒத்துழைக்கும் விதத்திலான தர உட்டுமான அபிவிருத்தி தொடர்பான சர்வதே பயிற்சி வேலைத்திட்டம் | 16.09.2018<br>21.09.2018 |
| | திரு. ஆர்.எல் வீரசேகர | ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் மேற்கு நாடுகளிலிருந்து மருந்து மாதிரிகளின் பெறுகைக்காக ஒரு சாதனம் என்ற வகையில் சட்டக உடன்படிக்கை தொடர்பான விஷேட விரிவுரை | 05.01.2018 |
| | | இலங்கை சுங்கத்தினால் பத்திரங்களற்ற செயன்முறைகளை அமுல்படுத்தல் தொடர்பாக கருத்தரங்கு | 15.02.2018 |
| | | விலைமனுகோரல் மதிப்பீடு தொடர்பான செயலமர்வு | 16.10.2018 |
| | திருமதி டீ.டீ சுதர்ஷன் | ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் மேற்கு நாடுகளிலிருந்து மருந்து மாதிரிகளின் பெறுகைக்காக ஒரு சாதனம் என்ற வகையில் சட்டக உடன்படிக்கை தொடர்பான விஷேட விரிவுரை | 05.01.2018 |
| கணக்காளர் | செல்வி. எஸ்.ஜீ.எம்.ஏ.பீ சேனாரத்ன | அரச துறையில் ஊழியர் படையின் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கான மூலோபாயங்கள் தொடர்பான அமர்வு | 07.06.2018 |
| | | அரச பெறுகை ஒப்பந்த உடன்பாடு டிப்ளோமா | 24.11.2018 முதல் 01 வருடம் |
| | | திறைசேரி திணைக்களத்தில் ஒருங்கிணைந்த திறைசேரி முகாமைத்துவ முறைமையை செயற்படுத்துதல் | 11.11.2018<br>14.11.2018 |
| நிர்வாக உத்தியோகத்தர் | திரு. ஈ.ஏ.பி.பி சாந்தன | அரச நிறுவனங்களின் உத்தியோகத்தர்களுக்கு சிங்கள மொழியில் அலுவலக கடிதங்களை எழுதுதல் | 27.11.2018 |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் | செல்வி. கே.எம்.ஜீ.ஏ கஸ்தூரி | அரச தனியார் பங்காண்மை தொடர்பான செயலமர்வு | 15.02.2018<br>16.02.2018 |
| | | பல்கலைக்கழகம் - தொழிற்துறை இணைப்பை உருவாக்கும் மாநாடு | 12.03.2018 |
| | செல்வி எம் நந்தனி | இளநிலை நிறைவேற்றுநர்களுக்கான ஆங்கில டிப்ளோமா – மட்டம் 3 | 15.11.2018 முதல் 12 வாரங்கள் |
| | திருமதி. ஜே.ஏ.டீ.யூ ரனசிங்க | இலங்கைக்கான வியாபார கலாச்சார பரிமாற்றமும் ஒருங்கிணைப்பும் | 31.07.2018<br>25.08.2018 |
| | திருமதி எஸ்.எம் மஹகெதர | கருத்திட்ட முகாமைத்துவமும் முன்மொழிவுகளை எழுதுதலும் | 29.01.2018<br>30.01.2018 |
| அரச முகாமைத்து | திருமதி ஏ திசாநாயக | இளநிலை நிறைவேற்றுநர்களுக்கான ஆங்கில டிப்ளோமா – மட்டம் 2 | 26.04.2018<br>26.07.2018 |

| | | | |
|---|---|---|---|
| வ உதவியாளர் | திருமதி எம்.என் தில்ருக்ஷி | தொழில் நோக்கத்துக்கான ஆங்கிலம் (CEEP) - சான்றிதழ் கற்கைநெறி – SLIDA – 1வது உள்ளீர்ப்பு | 24.06.2018 முதல் 12 வாரங்கள் |
| | | தொழில் நோக்கத்துக்கான ஆங்கிலம் - சான்றிதழ் கற்கைநெறி SLIDA – 1 ஆவது உள்ளீர்ப்பு – 2 ஆவது கட்டம் | 30.12.2018 முதல் 12 வாரங்கள் |
| | திருமதி டப்.எஸ்.பீ பெரேரா | தரம் 1 அரச முகாமைத்துவ சேவை வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையிலிருந்து விதிவிலக்களிப்பதற்கான கற்கைநெறி (குழு 1) | 03.09.2018 14.09.2018 |
| | | அரச நிறுவனங்களின் உத்தியோகத்தர்களுக்கு சிங்கள மொழியில் அலுவலக கடிதங்களை எழுதுதல் | 27.11.2018 |
| | திருமதி எம் கிருபா | தரம் 1 அரச முகாமைத்துவ சேவை வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையிலிருந்து விதிவிலக்களிப்பதற்கான கற்கைநெறி (குழு 1) | 03.09.2018 14.09.2018 |
| | திருமதி ஜீ.கே.சீ.கே ப்ரியதர்ஷனி | தரம் 1 அரச முகாமைத்துவ சேவை வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையிலிருந்து விதிவிலக்களிப்பதற்கான கற்கைநெறி (குழு 1) | 03.09.2018 14.09.2018 |
| | திருமதி டப்.ஆர்.என் பெர்னாந்து | தரம் 1 அரச முகாமைத்துவ சேவை வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையிலிருந்து விதிவிலக்களிப்பதற்கான கற்கைநெறி (குழு 1) | 03.09.2018 14.09.2018 |
| | திருமதி எல்.ஏ.எஸ்.பீ விஜேபண்டார | தொழில் நோக்கத்துக்கான ஆங்கிலம் (CEEP) - சான்றிதழ் கற்கைநெறி – | 06.02.2018 முதல் 3 மாதங்கள் |
| | திருமதி டப்.ஆர்.ஆர் விக்ரமசிங்ஹ | இளநிலை நிறைவேற்றுநர்களுக்கான ஆங்கில டிப்ளோமா – மட்டம் 2 | 26.04.2018 |
| | | வரவு செலவுத்திட்ட முன்னேற்ற கண்காணிப்பு முறைமை | 28.05.2018 |
| | | இளநிலை நிறைவேற்றுநர்களுக்கான ஆங்கில டிப்ளோமா – மட்டம் 3 | 15.11.2018 முதல் 12 வாரங்கள் |
| | திரு. ஏ.ஏ.டீ.டீ.ஜீ அதபத்து | கோவை முகாமைத்துவம் மற்றும் பொது அலுவலக நிர்வாகம் - தாபன விதிக்கோவை | 31.10.2018 02.11.2018 |
| | | திறைசேரி திணைக்களத்தில் ஒருங்கிணைந்த திறைசேரி முகாமைத்துவ முறைமையை செயற்படுத்துதல் | 11.11.2018 14.11.2018 |
| | திருமதி எஸ்.ஜீ நிலந்தி | தரம் 1 அரச முகாமைத்துவ சேவை வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையிலிருந்து விதிவிலக்களிப்பதற்கான கற்கைநெறி (குழு 1) | 03.09.2018 14.09.2018 |
| | திரு எஸ்.எஸ் ரனவீர | திறைசேரி திணைக்களத்தில் ஒருங்கிணைந்த திறைசேரி முகாமைத்துவ முறைமையை செயற்படுத்துதல் | 11.11.2018 14.11.2018 |
| சாரதி | திரு. ஆர்.ஏ.டீ.சீ ப்ரியதர்ஷன | அரசாங்க சேவை உத்தியோகத்தர்களுக்கான தமிழ் மொழிப் பயிற்சி | 13.06.2018 21.06.2018 |
| அலுவலக உதவியாளர் சேவை | திரு. ஏ.கே.பீ.ஆர் உபேசேகர | அரசாங்க சேவை உத்தியோகத்தர்களுக்கான தமிழ் மொழிப் பயிற்சி | 13.06.2018 21.06.2018 |

### 3.2 நிதிப் பிரிவு

திணைக்களத்தின் குறிக்கோள்களை எய்தும் நோக்கில் தலைப்பு 244 இன் நிகழ்ச்சித்திட்டம் 1 மற்றும் கருத்திட்டம் 1 இன் கீழ் 2018 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் மீண்டெழும் செலவினத்திற்காக ரூபா 1,430,000 வும் மூலதனச் செலவினத்திற்காக ரூபா 290,450,000 வும் என மொத்தமாக ரூபா 291,880,000 வழங்கப்பட்டது. மீளாய்வுக்கு உட்படுத்தப்படுகின்ற வருடத்தின் உண்மைச் செலவினம் ரூ. 287,345,234 ஆக காணப்பட்டது. அச்செலவினத்தினுள் மீண்டெழும் மற்றும் மூலதனம் செலவினங்களாக முறையே ரூபா 286,098,284 மற்றும் ரூபா 1,246,950 ஆக காணப்பட்டது. வரவு செலவுத்திட்ட ஏற்பாடுகளின் பயன்படுத்துகை அட்டவணை 3.2.1 இல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 3.6**

**2018 இல் வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டின் பயன்பாடு**

| இல | செலவின விபரம் | 2018 வரவு செலவு திட்டம் (ரூபா) | 2018 உண்மை செலவினம் (ரூபா) | சதவீதம் (%) |
|---|---|---|---|---|
| 1 | **மீண்டெழும் செலவினம்** | **290,450,000** | **286,098,284** | **98.5** |
| | ஆளுக்குரிய வேதனாதிகள் | 34,390,000 | 31,762,116 | 92.4 |
| | பயணச் செலவுகள் | 4,859,365 | 3,818,443 | 78.6 |
| | வழங்கல்கள் | 3,035,000 | 2,926,355 | 96.4 |
| | பராமரிப்பு செலவு | 1,750,000 | 1,563,322 | 89.3 |
| | சேவைகள் | 7,135,768 | 6,772,020 | 94.9 |
| | மாற்றல்கள் | 239,279,867 | 239,256,027 | 100.0 |
| 2 | **மூலதன செலவினம்** | **1,430,000** | **1,246,950** | **87.2** |
| | மூலதன சொத்துக்களின் மறுசீரமைப்பும் மேம்பாடும் | 50,000 | 0 | 0 |
| | மூலதன சொத்துக்களை கையகப்படுத்தல் | 880,000 | 806,750 | 91.7 |
| | இயலளவினை கட்டியெழுப்புதல் | 500,000 | 440,200 | 88.0 |
| | **மொத்தம்** | **291,880,000** | **287,345,234** | **98.4** |

*மூலம் : வியாபாரம் மற்றும் முதலீட்டுக்கொள்கை திணைக்களம், 2018*

அட்டவணை 3.7 இல் காட்டப்பட்டுள்ளவாறு, திணைக்களத்துக்கு பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகளுக்குள் இவ்வருடத்தில் அரச உத்தியோகத்தர்களின் முற்பண "பீ" கணக்கினை செயற்படுத்த முடியுமானது.**அட்டவணை 3.7**

**2018 இல் அரச உத்தியோகத்தர்களின் முற்பண "பீ" கணக்கு**

| இல. | விபரம் | அங்கீகரிக்கப்பட்ட எல்லை (ரூபா) | உண்மை தொகை (ரூபா) |
|---|---|---|---|
| 1 | செலவினத்தின் உச்ச எல்லை | 4,000,000 | 3,465,773 |
| 2 | வரவுகளின் இழிவு எல்லை | 1,500,000 | 2,309,183 |
| 3 | பற்று மீதியின் உச்ச எல்லை | 12,000,000 | 9,636,240 |

*மூலம் : வியாபாரம் மற்றும் முதலீட்டுக்கொள்கை திணைக்களம், 2018*

### 3.3 கணக்காய்வு விசாரணைகள்

கணக்காய்வாளர் நாயக திணைக்களம் மற்றும் உள்ளக கணக்காய்வு பிரிவினால் எழுப்பப்பட்ட விசாரணைகளுக்கு துலங்கல் காண்பிக்கப்பட்டதுடன் தேவையான சந்தர்ப்பங்களில் பலவீனங்களை சீர்செய்வதற்கு தீர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.